
# திருப்பம்



ஸ்ரீஜாகசப் பாலமா

# திருப்பம்

ஜோசப் பாலா

நான் வெளியீடு

திருப்பம்
சிறுகதைத் தொகுதி
ஆசிரியர் : ஜோசப் பாலா
முகவரி : 12, செல். பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.
'நான்' வெளியீடு – 16
முதற் பதிப்பு : வைகாசி, 1990
சாதாரண பிரதி : ரூபா 20/–
நூலகப் பிரதி : ரூபா 25/–

**THIRUPPAM**
A Collection of Short Stories
Author : **JOSEPH BALA**
**NAAN Publication,**
**O. M. I. Seminary,**
**Colombuthurai,**
**Jaffna, Sri Lanka.**
Printers: **Mani Oosai Printers**
**12, St. Patrick's Road,**
**Jaffna, Sri Lanka,**

முன்னுரை

# சின்னஞ் சிறிய மலர்கள்

மலர்கள் மனதுக்கு மகிழ்வும் நிறைவும் தருபவை. அவை ஒவ்வொன்றுக்கும் ஒரு தனித்துவம் உண்டு. தாமரை, சம்பங்கி, ரோஜா என்பன அட்டகாசமாய் மலர்ந்து சிரிக்கின்றன என்றால், தரை மட்டத்தில் மலர்ந்து சிரிக்கும் பட்டன் ரோஜாக்கள் இன்னொரு வகையில் மனதைத் தொட்டு இதமாக மலருகின்றன.

ஜோசப் பாலாவின் 'திருப்பம்' சிறுகதைத் தொகுப்பைப் படித்து முடித்தவுடன் இந்த எண்ணம் என் மனதில் தோன்றியது.

கடலின் ஆழத்தில் கிடக்கும் சிப்பியினுள், கடல் மணல் ஒன்று புகுந்து ஏற்படுத்தும் உறுத்தலே முத்தாகப் பரிணமிக்கிறது என்பர். ஜோசப் பாலா என்ற சிப்பியினுள் அவ்வாறு பல மணல்கள் உட்புகுந்து உறுத்தலை ஏற்படுத்தியிருக்கிறது என்பது தெரிகிறது.

உத்தியோகம் பார்க்கும் காலத்தில் ராஜ கம்பீரத்துடன் வாழும் அதிபர் ஒருவர், இளைப்பாறியதும் வீட்டில் கூட மதிப்பில்லாது செல்லாக் காசாக மாறுவது சர்வசாதாரண மாக எங்கும் நடக்கிறது. இந்தச் சம்பவம் கதாசிரியரின் இதயத்தில் தைத்து உறுத்தல் ஏற்படுத்த, அது 'ஒதுக்கப் பட்டவரல்ல' என்ற முத்தாக முகிழ்க்கிறது. இவ்வாறே திரு மண வாழ்வு கிட்டாது முதிர்ந்த நிலையடையும் பெண்களின் அவலம் (வாழத் துடிக்கிறாள்), வெளி நாட்டு மோகத்தால் பெற்ற தாய்தந்தையரையும் பிறந்த பொன்னாட்டையும் உதறித் தள்ளிவிட்டு வெளிநாட்டுக்குச் சென்று பணம் குவிக் கத் துடிக்கும் இளைஞர்களின் சுயநலம் (பாதை மாறும் பயணங்கள்), சொந்த மகளின் இதய தாபத்தைப் புரிந்து கொள்ளாது அவளை வீட்டில் ஒதுக்கி வைத்து அவளுக்கு 'விசர்' முத்திரை குத்தும் பெற்றோரின் அறியாமை (அது ஒரு இது), வீட்டில் உள்ள அடக்கு முறையினால் அதை உடைத்தெறிந்து சட்டியிலிருந்து அடுப்பில் விழும் இளம் பெண்ணின் அவலம் (சிறை), கல்யாணச் சந்தையில் விலை போக முடியாமல் தனித்துநிற்கும் சகோதரிகளின் நிலை (பேரம்), வெளிநாட்டில் சொந்தபந்தங்கள் நிறைய இருந் தாலும் சொந்த ஊரில் யாருமற்ற அனாதையாகவே வாழும் பெரும் புள்ளிகளின் அனாதைநிலை (சுமைகள்), மனமொத்த தம்பதிகளின் வாழ்வுக்கு உலைவைக்க முயலும் பொறாமைப் பிண்டங்கள் (உறவில் மலர்ந்த உண்மைகள்), சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும் சிந்தையிரங்காத சிறுமை (திருப்பம்) முதலிய மணல்கள் இவரது இதயத்தில் புகுந்து மிகுந்த உறுத்தலை ஏற்படுத்தியிருக்கின்றன என்ற எண்ணம் இக் கதைகளைப் படிக்கும்போது நமது இதயத்தில் தைத்து உறுத்தல் ஏற்படுத்துகிறது.

ஜோசப் பாலாவின் நடை மிகக் கச்சிதமானது. சொற் சிக்கனமும் கதைக் கருத்தைவிட்டு அகலாத பார்வையும் தந்தி நடையில் கதைகளை நகர்த்தி அவற்றுக்கு இறுக்கமான ஒரு கட்டமைப்பைத் தருகின்றன.

இத் தொகுப்பில் ஒன்பது சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. அவற்றை ஒட்டுமொத்தமாகப் படித்து முடிக்கும்போது, கதைகளின் பக்குவ நிலையில் ஒரு பரிணாம வளர்ச்சி தென்படுகிறது. அதன் உச்சம், இறுதிக் கதையான 'திருப்பம்' என்ற கதையில் பிரதிபலிப்பதுடன், கதையின் கருத்திலும் நடையிலும் மிகுந்த அழுத்தம் கொடுத்து நிறைவு தருவதைக் காண முடிகிறது.

வெளிநாட்டில் உத்தியோகம் பார்ப்பதை ஒரு பெருமையாகக் கருதும் பெற்றோர்களும் பிள்ளைகளும், அதனால் ஏற்படும் சிறுமைகளையும் வெறுமைகளையும் நிரவல் செய்ய பெரும் பாசாங்கு செய்கின்றனர் என்பது வெளிப்படை. இது ஒரு மௌன நாடகம். மெல்லவும் முடியாத விழுங்கவும் முடியாத ஒரு சங்கட நிலை. இந்தத் திரிசங்கு சொர்க்கம், தமக்கும் தாம் பிறந்த ஊருக்கும் எவ்வித பயனும் தராத ஒரு மாயை என்பதைத் 'திருப்பம்' என்ற கதை நறுக்கென்று சொல்கின்றது.

அது போலவே 'சுமைகள்', 'சிறை', 'பேரம்' முதலிய கதைகளும் நல்ல வார்ப்புடன் அமைந்த நல்ல சிறுகதைகள். தொகுப்பிலுள்ள ஏனைய கதைகளும் கதாசிரியரின் எண்ணத்தை நமது இதயத்தில் அலைமோதச் செய்யத் தவறவில்லை. இக்கதைகளில் மனோவியல் ரீதியான அணுகுமுறை கொஞ்சம் தூக்கலாகவே தெரிகிறது.

சில கதைகளில் கலைத்துவமும், கவித்துவமும் செறிந்து மெருகேறினால், அவை இன்னும் சிறப்பாக அமையும் என்பது என் எண்ணம். ஜோசப் பாலாவின் கதைகளில் காணப்படும் வளர்ச்சி அந்த நம்பிக்கையையும், எதிர்பார்ப்பையும் நம் மனதில் ஆழமாக விதைக்கின்றன.

'பார்பதியகம்'
ஆரையம்பதி — 1,
காத்தான்குடி,
14-04-90.

இரா. நாகலிங்கம்
(அன்புமணி)

# பதிப்புரை

ஆழமான சிந்தனையினாலும் கடின உழைப்பாலும் முன்னேறிவரும் இளம் எழுத்தாளர் **ஜோசப் பாலா**

அனுபவ வீச்சுக்களை ஆக்க இலக்கியங்களாக மாற்றுவதால் புனைபெயரில் அடிக்கடி மறைந்து கொள்ள நேரிடுகிறது!

'நான்' உளவியல் மஞ்சரியின் துணையாசிரியருள் ஒருவர். எழுத்தும் வாழ்வும் சமநிலைத் தன்மை கொண்ட சமூக யதார்த்தவாதி. இவரின் படைப்புக்கள் ஈழத்தின் தினசரிகளிலும் வாரப் பதிப்புகளிலும் மாத வெளியீடுகளிலும் அடிக்கடி வெளிவந்து கொண்டிருக்கின்றன. இப் படைப்புக்கள் யாவும் அன்றாட வாழ்வில் அவதானிக்கு நிகழ்வுகளை, உணர்த்தும் உண்மைகளை, சமூகத்தில் ஏற்படும் சமவலுத் தாக்கங்களைக் கொண்டவை

இவரது திருப்பம் என்ற சிறு கதைத் தொகுதி 16 வது 'நான' வெளியீடாக வருகின்றது. **உணராத உண்மைகள்** என்னும் இவரின் முதலாவது சிறுகதைத் தொகுதி ஏற்கனவே வந்த 'நான்' வெளியீடாகும்.

உள்ளத்து உணர்வுகளையும், உறவுச் சிக்கல்களையும் தொடர்புபடுத்தி வெளிவரும் இச் சிறுகதைத் தொகுதி, வாசக நெஞ்சங்களில் ஒரு பரவலான எழுச்சியை, மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

**வி. பி.**

# என்னுரை

வாழ்வில் ஏற்படும் பல்வேறு வகையான அனுபவங்களின் ஊடாக உணர்ந்துகொள்ள வேண்டிய உண்மைகளுக்கு அழுத்தம் கொடுக்க - நேரில் சந்தித்த பாத்திரங்களுக்கு உயிரூட்டிச் சிறுகதை வடிவில் எழுத முயன்றதன் பயன்தான் இத் திருப்பம்.

இது எனது இரண்டாவது சிறுகதைத் தொகுதி. நல்லிதயம் கொண்ட பல அன்பர்களின் தூண்டுதலும், ஒத்துழைப்பும் இதனை வெளிக்கொணர ஏதுவாய் அமைந்தன. இத் தொகுதியில் இடம் பெற்றுள்ள ஒன்பது கதைகளும் பாது காவலன், வீரகேசரி, நான் (உளவியல் மஞ்சரி) ஆகியவற்றில் வெளியானவை. இவற்றைப் பிரசுரித்து ஊக்குவித்த ஆசிரியர்களுக்கு எனது இதயம் நிறைந்த நன்றிகள்!

எனது முதலாவது சிறுகதைத் தொகுதியான 'உணராத உண்மைகள்' எனது கன்னி முயற்சியாகும். அதன் வாயி

லாக, வாசக - விமர்சக நல் இதயங்களின் குறை நிறைகள் எனது எழுதுகோலுக்கு உந்துசக்தியாகவும், எனது சமூகப் பார்வையில் ஏற்படும் திருப்பங்களுக்கு ஆதர்ஸமாகவும் அமைந்தன. கால ஓட்டத்தில் அப்பின்னணியை நினைவுபடுத்தும் காலக்கண்ணாடியாக எழுதியவையும், நடைமுறையும், இவற்றிலிருந்து உணரப்படவேண்டியவையும், இலகுவான முறையில் சென்றடையச் சிறந்த வடிவம் சிறுகதையே என்பதை உணர்ந்து, அவற்றைப் புனைபெயரில் எழுதி வந்தேன்.

அளவு கோலுக்கு அளவாக எழுத முனையாது, முகம் பார்த்துக் கருத்துக் கூறுதற்கு வழிவைக்காது, எண்ணக் கருக்கள் மக்களிடையே சென்றடைவதற்கும், அவர்களது உண்மையான அபிப்பிராயங்களை அறிந்துகொள்வதற்குமாகவே அவ்வாறு புனைபெயரில் எழுதினேன். அதில் நல்ல பலனும் கிடைத்தது!

இம் முயற்சியும் வாசகரின் நல்லிதயங்களைச் சென்றடைந்து வெளிப்படும் கருத்துக்கள் மூலம், மேலும் பல திருப்பங்களை ஏற்படுத்த உதவும் என்ற நம்பிக்கையோடு உங்கள் அன்புக்கும் ஊக்குவிப்புக்கும் நன்றி தெரிவிக்கின்றேன்

எழுத்துலகில் மூத்தவரும், என்னை நேரில் காணாமலேயே என் எழுத்துக்கு ஊக்கமும் உற்சாகமும் நல்கி, இன்று இத் தொகுதிக்கு முன்னுரை வழங்கிய மட்டுநகர் பெற்றெடுத்த மூத்த எழுத்தாளர் (அன்புமணி) இரா. நாகலிங்கம் (உதவி அரசாங்க அதிபர், கச்சேரி மட்டுநகர்) அவர்களுக்கும் 'நான்' வெளியீட்டுக் குழுவினருக்கும், நிறுவன இயக்குனர் வண. பிதா வின்சன்ற் பற்றிக் அவர்களுக்கும் என் உளம் நிறைந்த நன்றி உரியது!

12, சென் பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.
12-05-'90

ஜோசப் பாலா

# 1

## ஒதுக்கப்பட்டவரல்ல

**டாங்**... டாங்... டாங்..., அந்த பாடசாலை மணி ஓசை தான் அது. காலை 8-00 மணியாகி இதுவரை எவருமே எனது அறைப்பக்கம் வரவும் இல்லை. வர வர இப்போ இங்கு நடப்பது என்ன வென்றே தெரியவில்லை. என்ற மன உளைச்சலுடன் அறையில் இருந்து வெளியே வந்தார், ஓய்வு பெற்ற அதிபர் தணிகாசலம். நடு ஹோலில் அங்கு மிங்கும் எதனையோ தேடி அவசரத்தோடு புறப்படத் தயாரான மனைவி கமலத்தின் குரல் அவருக்கு மேலும் சிக்கலான சிந்தனையைத்தான் கொடுத்தது.

''நான்தான் எழும்பப் பிந்திவிட்டேன் என்றால், என்னை எழுப்பிவிடக் கூட உங்களால் முடியவில்லையே. இன்று ரேம் சோதினை வேறு, அதிபரிடம் திட்டு வேண்ட வேண்டியது தான். இந்த மேசையில் வைத்த மணிக்கூட்டைக் கூட காணவில்லையே'' என்றவாறு ''உங்களுக்கு சுடுதண்ணிப் போத்தில்ல கோப்பி இருக்கு, பாணும் பட்டரும் மேசையில் மூடி வைச்சிருக்கிறன். எடுத்துச் சாப்பிடுங்கோ, தம்பி வந்தா நான் நேற்று சொன்ன அலுவலை ஒருக்கா பாக்கச் சொல்லுங்கோ. நான் போயிற்று வாறன், பின்னுக்கு போறதெண்டா கதவைச் சாத்திட்டுப் போங்கோ. இப்ப நாடு இருக்கிற சீரில கள்ளர் வாறதும் தெரியாது. போற

தும் தெரியாது. பார்த்துக் கொள்ளுங்கோ நான் போயிற்று வாறன்.'' என்றவாறு வாசலைக் கடந்தாள்.

தணிகாசலத்தின் மனப் பாரத்தையும், உடற்பாரத்தையும் சேர்த்து அந்த சாய்மனைக் கதிரை தாங்கிக் கொண்டது. இதென்ன உலகம், இதென்ன வாழ்க்கை, இப்படி ஒரு வாழ்வா எனத் தனக்குள் தானே குமைந்து கொண்டு தனது சென்ற கால வாழ்க்கையை இரை மீட்கலானார்.

காலை ஐந்தரை மணிக்கே எழுந்து எல்லோருக்கு முன்பே தனது பள்ளி வாழ்வின் சட்டதிட்டங்களை ஒத்திகை பார்ப்பதுபோல கதவில் தட்ட, சுவர்க்கடிகாரமும் அதிபரின் கட்டளைக்கு தலையசைப்பது போல, தனது கடமையினை செய்து டாங்... டாங்... என ஒலி எழுப்பும், தணிகாசலமும் அதற்கு ஏற்றாற் போல் தான் வருவதை முன்னறிவிக்க செருமலும், பக்திப் பாடலும் முணுமுணுப்பதையே அவர்களின் உதய கானமாக கேட்டு, மனைவி பிள்ளைகள் எழுந்து தமது நேர சூசி வாழ்க்கைக்கு தயாராகி விடுவார்கள். பிள்ளைகள் மூவரும் பாடங்களைப் புரட்டி பல்கலைக்கழக வாழ்க்கைக்கு தயாராவார்கள்.

அந்த நேரத்தில் கமலத்தின் நிலையோ, அடுப்படி தரிசனம், அரை வேக்காடு உணவுடன், அவசர அவசரமாக, காலை தேநீரும் தயாராக்கி அவர்கள் இருப்பிடத்திற்கு கொடுப்பதுடன, பம்பரம் போல் இயங்கும் கால்கள் பாடசாலைக்குச் செல்ல வேண்டும் என்ற மன உந்துதலால் வேலைகளை விரைவு படுத்தும் போது அவள் ஒருநாள் கூறினாள்.

''இது என்ன யந்திரயுகமா? இப்படிப்பட்ட வாழ்க்கை முறையை கூட மனிதர்கள் தானே தயார்படுத்திக் கொண்டார்கள். மிருகங்கள், பறவைகளின் சுதந்திரத்திற்கும், மனிதர்களின் சுதந்திரத்திற்கும் எத்தனை வேறுபாடுகள். தமக்குத்தாமே போடும் வேலிகளாலே குறுகி விட்ட மனித மனங்களில் எப்படி சுதந்திர உணர்வை சுவைக்க முடியும்?'' என அவள் சிணந்து கொண்டாள்.

எந்த ஒரு நிலையிலும் கமலத்தின் வேகம் குறைந்தால் கூட எனது நோரூசி ஆட்டம் கண்டு விடும். ரயில் இடைநடுவே இயந்திரக் கோளாறுல் நின்று விட்டது போன்ற நிலைதான் ஏற்படும். பின்னர் யந்திரம் மட்டுமா? அதில் உள்ள பெட்டிகளும் சேர்ந்தல்லவா பாரமாகிவிடும். அந்த பாரத்தை இளுக்கும் சக்தியே இப்போ கமலத்தில்தான். என்றாலும் அந்த நிலையிலும் கமலம் எனது பணிவிடைக்கு பல வழியில் முன் நிற்பாள், அவளிடமும் என் அதிகாரத் தோறணையை குறைத்துக் கொள்வதில் அதிபர் அந்தஸ்து விட்டு வைப்பதில்லைதான். அது எனது உடம்பில் ஏறி விட்ட முரட்டுக் கௌரவம் என உணர்ந்தாலும் அதைக் குறைத்துக்கொள்ள மனம் இடம் தருவதில்லை. அதைக் கூட அவளும் எதிர்பார்ப்பதில்லைதான்.

பக்தனுக்கேற்ற பதிவிரதை போல் பள்ளி வாழ்க்கைக்கு பக்கதுணையாய் இருந்தவள் கமலம். இன்று எந்த வித அக்கறையுமின்றி என்னை ஒரு காவலாளியாக்கிவிட்டு அவள் ஏதேதோ சொல்ல நான் தலையாட்டும் பொம்மையாகி விட்டேனு? இதைவிட எனது தனிமை என்னை வாழ வைக்காதா? நான் வாழமாட்டேனு, ஏன் எனக்கு இந்த நிலை? விரக்தியின் விளிம்பே இப்போதுதான் தெரிகிறது. என எண்ணியவாறு உணவை மறந்து, உறக்கத்தைத் தேடினுர். அது கூட இணைய மறுத்தது. மனதை அழுத்தியது, தனிமையே ஒரு சிறையானது.

வாசல் சத்தம், மீண்டும் இன்றைய கடமையை நினைவூட்டியது. சென்று கேற்றை திறக்கு முன்பே, ''அப்பா, அப்பா கதவைத் திறவுங்கோ'' மகள் சாந்திதான் படிக்கச் சென்றவள் பாதியில் வருகிறுள், என உணர்ந்தவர் செல்வதற்கிடையில் சத்தம் பலமானது. ஏதோ பதட்டம்தான். இப்படி எத்தனை நாட்கள் செல்வதும், அரைவழியில் திரும்புவதும் என எண்ணியவர், ''என்ன மகள் அவசரப்படுகிறுய், நான் வாறன் எல்லோ'' என வாசலைத் திறந்தார். ''அம்மா வந்து விட்டாவா? பாடசாலையும் இண்டைக்கு இல்லை. எங்க போனவ அம்மா'' என கேள்வியோடு உள்ளே நுழைந்தாள்.

''ஏன் சாந்தி வரும்போது பாடசாலை பூட்டியா இருக்கிறது?''

''ஓம, ஓம், இப்ப வெளியில் என்ன நடக்கிறதெண்டு உங்களுக்கு என்ன தெரியப் போகுது. அண்ணா வரவில்லையா அவரும் சென்று விட்டாரா அப்பா'' என்ருள். ''யாருக்கு தெரியும். யாரு என்னிடம் சொல்லிச் செல்கிருர்கள். இப்ப வர வர வீட்டிலும் நிம்மதி இல்லை. வெளியிலும் இப்படி என்ருல் எங்குதான் நிம்மதியோ?'' என கூறி சாய்மனையில் சாய்ந்தவரின் சிந்தனையில் சில நிமிடம் எதுவித சத்தமுமில்லை.

''அம்மாவும், அண்ணவும் வந்து விட்டார்கள், அப்பா இன்னும் நித்திரைதானு?'' என்ருள் சாந்தி. இது கூட அவருக்கு தாக்கத்தைத்தான் தந்தது. எந்த வார்த்தைகளையும் செயல்களையும் தனக்கு சாதகமானதாக எடுத்து, அவற்றிற்கு விளக்கம் காண்பதுதான் ஓய்வு நாட்களில் வேலையானது. இதுவே அதிக உள்மன உழைச்சலை ஏற்படுத்தவும் காலனுய் இருந்தது.

''அப்பா நீங்கள் இன்னும் சாப்பிடவில்லையா?'' மகளின் கேள்விக்கு தலையாட்டல்தான் பதிலாய் வந்தது. ''ஏன் அப்பா என்ன சுகவீனம், ஏன் பேசாம இருக்கிறீங்கள்'' என்ருள்' அவரோ நெஞ்சைப் பொத்தி கொண்டு திணறினர் அம்மாவுக்கும், அண்ணனுக்கும் கூறினுள் சாந்தி. பதட்டத்துடன் எல்லோரும் அவரை வைத்தியரிடம் கூட்டிச் சென்றனர்.

அண்ணனின் நண்பன் தான் டாக்டர் நகுலேஸ். அவரது பரிசோதனையின் பின் அப்பாவின் உடல் நலத்தில் எதுவித தாக்கமும் இல்லை. உளநலம் தான் இந்த சோர்வுக்கு காரணம் என பதில் தந்தார். ''கடமையாற்றியவர் திடீர் என வேலையில் இருந்து ஓய்வு எடுத்ததும் ஒரு காரணமாகிறது. அத்தோடு அவரது தனிமைதான் அவருக்கு ஊறுக உள்ளது. இப்படி இந்த வயதில் பலரை சந்தித்திருக்கிறேன். நீங்கள் ஆட்சேபிக்கவில்லையெனின் அவரது தகைமை திறமைக்கு

ஏற்ப அவரைப் பயன் படுத்த நான் முயற்சிக்கிறேன். இதற்கு நீங்களும் துணைபுரிந்தால் பல நோய்கள் வராதும் தடுத்து விடலாம்''. என நட்பின் முறையால் ஆலோசனை கூறினர்.

''என்ன டாக்டர், நீங்கள் எதுவும் எமது நன்மைக்காகத் தானே கூறுவீர்கள்.'' என்றுள் சாந்தி.

''அப்படி என்றுல் அவரை அடுத்த வாரம் முதல் வேலைக்கு செல்ல வழி செய்கிறேன்.'' என்றுர் டாக்டர் நகுலேஸ்.

''என்ன டொக்டர் இனியும் வேலைக்கா செல்வது இந்த வயதில் ஓய்வு தேவை என்று தானே வீட்டுக்கு அனுப்பினர் கள். அத்தோடு இனியும் ஏன் கஸ்ரப்பட வேண்டும். வீட் டோடு இருக்கட்டும்'' என்றுள் மனைவி கமலம்.

''இந்த ஓய்வுதான் இந்த வருத்தங்களுக்கே காரணமாகிறது ஒய்வுபெற்றவரெல்லாம் ஒதுக்கப்பட்டவரல்ல. அவர்களின் அறிவையும், அனுபவத்தையும் பயன்படுத்துவதால் அவர்கள் தனிமையைத் தவிர்ப்பதோடு, உடல் நலத்தையும் பாது காத்து தன்னம்பிக்கை ஊட்டுவதுடன் எமது சமுதாயத்தை வளபபடுத்தவும் அவர்கள் சக்தியையும், அறிவையும் பயன் படுத்த முடியும். பயன்படுத்தாத சக்திகள் பயனற்றதாகி விடும். அனுபவத்தை அலட்சியப்படுத்தக் கூடாது'' என்ற டாக்டரின் கூற்றுக்கு மறுபேச்சில்லாது எல்லோரும் தலையசைத் தனர்.

இந்த முடிவைக் கேட்ட அதிபரின் மனம் புத்துணர்ச்சி பெற்றது. தனது புது வாழ்வின் அர்த்தங்களை புரிந்தவராக புதிய நிர்வாக பொறுப்பை அந்த வைத்திய நிலையத்திலே ஏற்கத் தயாராகினர்,

2

# வாழத்துடிக்கிறள்

"பவானி... பவானி... கூப்பிட்டது காதில ஏறேலையா உனக்கு" அப்பாவின் கடின குரல் அவள் மனதை கல்லாக்கியது போல் உம் என்று இருந்து விட்டாள்.

"இவளுக்கு இப்ப வர வர எதுகும் ஏறுதில்லேத்தான்" தாயின் கண்டிப்பும் மேலும் தாக்கத்தை கொடுத்தது.

"ஏனம்மா பவானி எழும்பி சாப்பிடன் பிள்ளை. நீ இப்படி இருந்தா மற்றதுகள் எப்படி சொல்லுக் கேட்கப்போகுது. வா பிள்ளை வா சாப்பிட்டுப் படுபிள்ளை" ஆச்சியின் குரல் ஏதோ ஆறுதல் வார்தை போல் இருந்தாலும் அறிவுரை ஏற்கும் மன நிலை இல்லைத்தான் பவானிக்கு.

"அக்கா அக்கா உங்க டேபிளதா றியாக்கா, அண்ணவுக்கு கடிதம் எழுதிற்று தாறன்"

தங்கையின் எதிர்பார்ப்பும் பவானிக்கு தொல்லை போல் தான் இருந்தது. எதற்கும் முகம் கொடாதவள் போல் படுக்கைக்கு தயாரானாள்.

எல்லோர் முகத்திலும் ஏதோ ஒரு கேள்விக் குறிகள்தான். அப்படி அவள் மாற்றத்தின் காரணம் தான் என்ன? படுக்கையில் புரண்டவள் தூக்கத்தை வரவழைக்க முயன்றும் பயன் இல்லை.

வீட்டிலும் அமைதி இல்லை எதிர்கால வாழ்விலும் சுபீட்சம் இல்லை. இந்த நிலையில் பிறந்ததினம், புதுச் சட்டை, புதிய சந்திப்பு, புதிய மாற்றம் எல்லாம் போலி வேசம் போல் அவள் மனதைக் குடைந்து எதிர்கால இருள் வாழ்வை எண்ணிக்கலங்கி நின்றாள்.

வீட்டாரும் அவள் நிலையை புரியாது பலவிதத்தில் சிந்திக்க தொடங்குகின்றனர். முடிவுகள், மருத்துவனை விட மந்திரவாதியின் நூல் கட்டல் தான் நல்லது என முடிவாகிறது

பரீட்சை முடிந்து முடிவுகள் திருப்தி இல்லை, படித்து முடிப்பதற்குள் பல திட்டங்கள், பதவிகள், வருவாய்கள் என்று எண்ண அவர்களுக்கு பரீட்சையின் முடிவும் ஒரு தடையாயிருந்தது. மீண்டும் தொடர கௌரவம், தனது வயது ஒத்தவர்கள் மேற்படிப்புக்கு முயல நான் மட்டும் எப்படி நினைத்துப் பார்க்கவே அவளால் முடியவில்லை.

மன உளைச்சலை யாரிடம் சொல்வது. அடுத்து வருவது பிறந்தநாள். முன்பு போல் புதுஉடை தரித்து பலரோடும் முன்பு களித்த நினைவுகளை எப்படி மறக்க முடியும் ''உடைகள் மாறி தாவணி போட்டால் மட்டும் பெரிய மனுஷி ஆகிவிட முடியுமா அவள்? படிச்சு கிளிச்சதிலை பிறந்தநாள் கொண்டாட என்ன வேண்டி இருக்கு'' என்றகிண்டல்பேச்சும் அவள் மனதிற்கு இருளைததான் தந்தது.

பள்ளி செல்லும் நாட்களில் துள்ளித்திரியும் சிட்டுப் போன்று கலகலப்போடு திரிந்த வேளை, அம்மா கூறிய

வார்த்தைகளை எண்ணிப் பார்க்கிறுள் பவானி, ''என் பிள்ளை என்னத்தில் குறைவு, அவள் அழகிற்கும், படிப்பிற்கும் இங்கு யார் இருக்கினம் அவளை அடைய'' என கூறிய வார்தைகள் பசுமரத்தாணிபோல் அவள் மனதில் பதிந்த நினைவுகள் ''அவள் டாக்டராக, அல்லது வெளிநாட்டில் பெரிய படிப்புக்கு அனுப்பி, எஞ்சினியர், டொக்டரை பார்க்க வேண்டும். இவளுக்கு இங்கு யார் இருக்கினம். அதுவும் வெளிநாட்டில்தான்'' என பெருமையோடு உறவினருக்கு கூறி மகிழும் அம்மாவின் வார்த்தைகள் அவள் மனதில் உயர்ந்த எண்ணத்தை வளர்த்ததில் தவறில்லைத் தான்.

ஆண்டுகள் உருண்டோட அவர்கள் வசதிக்கு ஏற்ற வரனைத தேட முற்பட்ட பெரியோர் அவள் எண்ணத்தை சிதறடிப்பது போன்ற நிலைதான் அவளின் இந்நிலைக்கு காரணம் என எண்ணத் தவறிவிட்டனர்.

விலைவாசி உயர்வுபோல் வசதிக்கேற்ற வடிவும், அதற்கேற்ற படிப்பும், அதற்கு மேலாக எதிர்பார்க்கும் சீதனச் சந்தையில் போட்டியிட முடியாத பவானி குடும்பத்தில், தரத்தைப் பார்த்து தாரத்தை தவறி, இன்று வாழா வெட்டியாக, குடும்ப சுமையாக இருப்பது போல் சிந்திக்க தொடங்கிய நாள்முதல் பவானிக்கு எதுவுமே புதிராகத் தான் இருந்தது. தன்னை தனிமையாக்கி ஒதுங்கி வாழ முற்பட்டாள். தூரத்துப் பார்வை போல் வீட்டாரின் அணுகுமுறையும் அவளை இன்று மந்திரவாதியின் முடிவை எதிர்பார்த்து அவளது வாழ்க்கை உள்ளது.

பவானி குடும்பத்தின் நம்பிக்கைக்கு பாத்திரமான சாத்திரியும் வந்தார். சுற்றும் முற்றும் பார்த்து சுதந்திரமாக கூறுவதற்கு அவர்கள் கூறியவற்றில் அரைகுறை தகவல் எட்டி விட்டது. நம்பரைக் கேட்டு நடுவீட்டில் படையலுடன் தட்ஷணையும் சேர்த்து இரகசியமாக ஏதோ சொன்னுர்,

பவானியின் தாயாருக்கு, ஆறுமாதத்தால் ஒருபடையல், அதுவரை நூலைக் கட்டிவரும்படி கூறிவிட்டார். எல்லா சாத்திரியும் கூறுவது போல ''இப்போது காலம் சரியில்லை. ஆறு மாதம் பத்துநாளில் ஏதோ மாற்றம்'' என்று விட்டான். அது போதும் அவர்கட்கு, அவருக்கு தொடர்ந்து உழைக்க வேலை வந்த மன அமைதி. பவானியும் இந்த வேடிக்கையைப் பார்த்து சிரித்து விட்டாள். அதை கூட சாத்திரி தனது திறமைக்குக் கிடைத்த சான்றாக காட்டி விட்டார். ஏமாற ஏமாற ஏமாற்ற பலர் தொடர்வது போல் தான் அவளுக்குப் பட்டது.

இனியும் வீட்டில் இருப்பது அவளுக்கு சிறைக் கூடத்தில் வாழும் இன்றைய இளைஞர் நிலை போல் பட்டது. தப்பிக்க தனக்கு ஒரு வேலையைத் தேடினாள். வீட்டாரின் முயற்சியோ மூடச் செயலில் மும்முரமானது. பவானி ஓர் முடிவுக்கு வந்தவளாய் தன்தோழியை நாடி முதலுதவிப்பயிற்சி பெற சமூகநிறுவனம் ஒன்றுடன் இணைந்தாள். தாதிகள் பயிற்சிக் காலங்களில் நல்ல கருத்துக்கள் பரிமாறப்பட்டதை உணர்ந்தவளின் உள்ளத்திற்கும் முதலுதவி கிடைத்தது. இன்று அவளும் வாழத்துடிக்கிறாள். காரணம் அவள் பணி இன்றைய சமூகத்துக்கு தேவை என அவள் உணர்ந்து கொண்டாள்.

எல்லா நோய்களையும் மருந்தால் மட்டும் குணப்படுத்தி விட முடியாது மனம் திறந்த வார்த்தைகளை பரிமாறி ஆறுதல் கூறும் பவானியின் பணியால் அந்நோயாளர் இல்லமும் இன்று புது மலர்ச்சியில் மிதந்தது.

3

# பாதை மாறும் பயணங்கள்

''நான் எதைச் சொன்னாலும் வீட்டில் புரிஞ்சுகொள்ளு கிறாங்கள் இல்லையடா. ஆனாலும் நான்வீட்டில முழுதையும் சொல்லவும் முடியாது. இதை உன்னைத் தவிர ஆருட்ட சொல்ல'' நீ புரிஞ்சு கொண்டா சரி என்றவாறு துவிச் சக்கரவண்டியை தன் வாழ்க்கை போல் ஏற்றத்தில் அமத்தி உழக்கினான்.

''அமலன் உன் நிலை எனக்கு தெரியுது. அதாலதான் அவசரப்பட்டு ஆத்திரத்தில எந்த முடிவும் எடுக்காதை என்று சொல்லுறன். இரு பக்கமும் அறியாம உனக்காக முகமனுக்கு கதைக்கேல்ல. நீ கோவிச்சாலும் இது விசயமா வீட் டில என்ன நிலை எண்டு அறிஞ்சுதான் சொல்லுவன் அதுவரை பொறுத்துக்கடா'' என்றான, நண்பன் மூர்த்தி.

இருவரின் பலமும் அந்த ஏற்றத்திலும் எதிர் தாக் கத்தையும் எதிர்த்து, உளக்கிச் செல்லும் வேகம், இருவர் மன உணர்வுகளின் உந்தலால், சுமை தெரியா பருவம் முந்தியே செல்கிறது. அருகில் செலலும் வாகனங்கள் அவர் கள் வாழ்க் கைக்கு சவால் விடுவது போல் மின்னல் வேகத் தில் சென்று மறைவது அமலன் மனதுக்கு ஏதோ போல் இருந்தது.

''ஹாய் அமல் எங்கேடா, இந்த நேரத்தில நான் எதிர்பார்க்கவே இல்லை நீ வரேல்லையா, கஜனின் றீட்ரடா இண்டைக்கு. அவன் பொறிணுக்கு போறதுக்காக பாட்டி வைக்கிறான் எல்லோ என்றான் மோட்டார் சைக்கிளில் வந்த நண்பன் ரமேஸ்.

'சொன்னான் தானடா ஆனா...' 'ஆனா என்னடா வாடா இதில போய் ஆரம்பத்தில திறப்பம் இப்பிடியும் வந்தா முடிவிலையும் சந்திக்க மாட்டாய் என்றான், உறுமும் மோட்டர் சைக்கிளில் இருந்து ரமேஸ்.'

''மூர்த்தி, நீ என்ன யோசினை வாறியா?'' என்றான் தனது முடிவை எடுத்தவனாய் அமல்.

'' அமல் இண்டைக்கு எது முக்கியம், நாங்க அவசரமா ஒரு அலுவலுக்கு போறம். ரமேஸ் நீ அமல விட்டிடு'' என்றான் மூர்த்தி.

''ரமேஸ் இவன் இப்படித்தான், நான் வாறன்.'' என்றான் அமல். ''மூர்த்தி உனக்கு எப்பவும் அலுவல்தான். ஆனா அமலுக்கு பாட்டி முக்கியம்'' என்றவாறு இருவரும் இணைந்து மூர்த்திக்கு கையசைத்து வேகமாக சென்றனர்.

விருந்துண்ணும் வேகம் நல்ல நண்பனின் உறவையும் மறைத்தது. தனது நிலையையும் மறக்க மது அவர்களின் விருந்தில் மன நிறைவை அளித்ததுபோல் கலந்தனர், புதிய நண்பர் புதிய வேதாந்தம். புதிய கண்டுபிடிப்புகள் புதிய போதை வஸ்துகள் இலகுவாக இனமாக விருந்தில் கிடைத்தன.

மெல்ல மெல்ல தமது உழைப்பால் முன்னேறும் விவசாயிகளின் உடலுழைப்பை அருகில் தெரியும் தோட்டங்

களில் வேலை செய்பவர்களின் கடமையுணர்வை எண்ணியவனாய் மூர்த்தியும் தனது நண்பன் அமலின் இல்லம் நோக்கி சென்றான்.

நிலங்கள் பிளந்து, பயிர்கள் நாட்டி, நீர் விட்டு பயிர் வளம் பெருக்கி உழைத்துஉண்ணும் அமலின் தாய், தந்தை, சகோதரர் அந்த வாழைமரத்தடி நிழலில் மூர்த்தியைக் கண்டதும் வந்தமர்ந்தனர். மூர்த்திக்கு வந்தகளை தீர, இளனிக்குலை இறக்கும் வேலையில் தம்பிமார் செயல்பட வீட்டாரும சுக துக்கம் விசாரித்து, 'தம்பி அமலனை கண்டீரா? உங்கள் வீட்டுப் பக்கம் தானே வந்திருப் பார்'' என அவனது நிலையை தொடுத்தனர்.

''காலையில் வந்தான். ஏன் அவன் முன்னேற்றத்தில் உங்களுக்கு அக்கறை இல்லையா? ஏன் அவன் மனதை புரிஞ்சு அவன் வழிக்கும் விட்டால் என்ன அம்மா?'' என மூர்த்தியும் தனது நட்பின் குரலால் அவர்களை அதட்டிக் கேட்டான்.

''ஏன் தம்பி என்ன குறை விட்டம். அவன் மூத்தவன், அவன் நல்லாயிருக்கத்தானே படிக்க வைச்சம். அவனுக்கு ரவுணில இருக்க வசதி செய்து அதற்கு என்ன செலவு எண்டாலும் நாம் இந்த மண்ணைக் கிண்டித்தானே கொடுதது வளர்த்தம்.''

''அது கடமைதானே ஐயா, உங்களுக்கு'' என்றான் மூர்த்தி.

''தம்பி இதில நாம தவறேல்ல. ஆனா அவன் அழியிறதுக்கு நாமளும் பலியாக ஏலுமா சொல்லு தம்பி பாப்பம்.''

''அப்படி அவன் உங்களையும் அழிய வைப்பானா. அவனும் விவேகமாத்தானே நடப்பான். படிச்சவனல்லோ!''

''படிச்சதாலதான் அவன் சொல்லுறன். தோட்டம் செய்யிறதை விட காணியை ஈடுவைத்து தன்னை வெளி நாட்டுக்கு அனுப்பட்டாம். இது முறையா தம்பி சொல்லு. இத முறையா? இத்தனை பேரும் இந்த நிழலில்தான் ஆறுறம். இந்த மண்ணில்தான் வாழுறம். இதைப் போய் இப்படிச் சொன்னனே பார் தம்பி. படிச்சத நம்ம மண்ணுக்கு பயன் படுத்தி வாழ வைப்பான் எண்டா, அவன் இந்த மண்ணை அடைவு வைச்சு அகதியா கையேந்தி எம்மையும் எல்லோ நடு றேட்டில பிச்சை எடுக்க வைக்கிறன். இதுக்கு வேற நாமும் உடந்தையாகணுமா? இததானு தம்பி படிச்சவங்க செய்யிற வேலே. அடுத்தது தம்பி தங்கச்சியளை நினைச்சானு? அவங்களின்ர வேர்வையும் இந்த மண்ணை நனைச்சுத்தான் விளைஞ்சுது பயிர்கள். படிச்சு முடிஞ்சா அவனும் வந்து சேர்ந்து இந்த தோட்டத்தில் உழைச்சு காலாகாலம் உயிர் வாழலாம் எல்லோ. இதில வெக்கம் என்ன இருக்கு.'' என்றவர் மயக்கத்தில அந்த மண்ணிற் சாய்ந்தார்.

எல்லோர் அழுகுரலும் படித்தவனை நினைத்து ஆத்திரத் தால் மனம் புழுங்கியது. மூர்த்தியின் முதலுதவியும் ஆறுதல் வார்த்தைகளும் அமைதியை வரவழைத்தது.

''அம்மா, ஐயாவை கவனமாக பார்த்துக்கொள்ளுங்கள். உண்மையில் அவர் மனதுக்கை எப்படி வேதனை எண்டு புரிஞ்சிட்டன்.''

''தம்பி இதுவரைக்கும் நாங்களும் அவரை பேசிக்கொண்டு தான் இருப்பம். வீட்டில அக்கறை இல்லை, பிள்ளையள்பற்றி எந்த நினைவுமில்லாமல் தோட்டத்திலநிக்கிறர் எண்டு இப்ப தான் புரியுது — அவர் மனத்தில் எப்படி வேதனைப்பட்டிருப் பார் என்று பாறை நிலத்தை பயிர் கொழிக்கும் பூமியாக மாத்தினவருக்குத்தான் அந்த அருமை புரியும். நாம் சும்மா கண்ணீரும் கதையும்தான் சொல்லி திட்டினம். ஆனு அவர் மனத்தின் சுமையை இண்டைக்கு அறிஞ்சம்

இதை அவன் புரிஞ்சுகொள்ளாட்டி புள்ளையாய் இருந்து தான் என்ன பயன்?'' என்றாள் விசனத்துடன் அமலன் தாய் பாக்கியம்.

''எதற்கும் பொறுமை இழக்காதீங்க. நான் அவனை கூட்டிக் கொண்டு வாறன்.'' என்று வாசலை விட்டு புறப்பட்ட மூர்த்தியை அக் குடும்பமே அவனையும் ஒரு பிள்ளையாக வழி அனுப்பி வைத்தது. பகட்டான நகர வாழ்வுக்கு பலியான மனித மனங்களின் நிலைகளை எண்ணியவனுப் கிராமப்புற சூழலில் உள்ள உறவு அவன் மனதை பெரிதும் நெகிழ வைத்தது. குடும்ப உறவில் உள்ள ஐக்கியம் சகல விதத்திலும் மனத்தை தொட்டது. இப்படிப்பட்ட ஒரு ஐக்கியம் குலைவதற்கு கல்வி காரணமாகலாமா? அப்படிப்பட்ட கல்வி எமது பகட்டுக்காக மட்டும் பயன்படுத்துவதும் இதை கௌரவம் என எண்ணும் கல்விக் முறை நமது சமூக அந்தஸ்துக்காக பயன்படுத்த முனைவதும் தேவைதானா? இந்த நிலையில் மாற்றத்தைக் காண எண்ணியவன் அந்த இறக்கத்தில் ஒரு சுகத்தை கண்டான். அவனது வண்டி தாமாகவே சிந்தனைக்கு இடையூறில்லாது சென்று கொண்டிருந்தது. எதிரே சனக்கூட்டம் தெரிவதைக் கண்டவன் விரைந்தான்.

''அதிற் தப்புவது கஷ்டம், இப்படியா இறக்கத்தில் இந்த வேகத்திலா வருவது, மாட்டுக்கென்ன தெரியும். மனிசரெல்லோ விலத்திப் போக வேணும். குடியாரை விட்டுது'' என்றவழிபபோக்கனின் வார்த்தைகள் அவன் செவியில் விழுந்தது.

அதே வாகனம்தான், காலையில் அமலன் சென்ற மோட்டார் சைக்கிள் இரத்ததில் தோய்ந்து கிடந்தது. இருவரும் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட விபரம் அறிந்து அங்கு விரைந்தான் மூர்த்தி.

இரத்த வங்கியில் இரத்தம் இல்லாததால் உயிர் பிழைப்பது கடினம் என டாக்ரர் உரைப்பது கண்டு, ஆபத்தில் நண்பனுக்கு உதவ மூர்த்தி தயாரானான்.

இரத்தம் கொடுத்து முயன்றவனானாலும் நண்பனின் இரத்தப் பெருக்கைத்தடுக்க அவன் அருந்திய போதை வஸ்து தடையாகி அவனை வாழ விடவில்லை. ❁

4

# அது ஒரு இது

வெளியூரில் சந்தித்த நட்பு தொடர்பாக அந்நணபியை சந்திக்க வென அவள் இல்லம் சென்றேன். அவ்வூர் எனக்கு புதிதாக இருந்தாலும் இலகுவாக வீட்டை அடைய முடிந்தது அவரது குறிப்பால், இருந்தும் அங்கு சென்ற எனக்கு இன்முகம் காட்டி அன்புடன் வரவேற்ற ஓர் கணததில் பல நாட்கள் பழகிப் பழக்கப்பட்டவர் போல் "வாங்க, வாங்க நீங்க வருவீங்க என்று எனக்குத் தெரியும், ஆனல் என்னைத் தான் உங்களுக்குத் தெரியாது என்ன! இருங்க, இருங்க உங்களைப்பற்றி அடிக்கடி கதைக்கிறநாங்கள்" என்ருர்.

நானே இன்று தான் முடிவு எடுத்து உடன் வருகிறேன் அதற்குள் என்ன எதிர்பார்ப்பு, வேறு யாரோ என்றெண்ணி எனக்கு வரவேற்பு நடக்கிறதோ என என மனதுக்குள் எண்ணியவளுய்...

"இல்லை, இல்லை, இது கலாவின் வீடுதானே?"

"இதில் என்ன சந்தேகம், என்னைப்பார்த்தால் அவள் சகோதரி மாதிரித் தெரியவில்லையா? அவளும் உங்ககிட்ட சொல்லலையா? சொல்லியிருப்பாவே நான் ஒரு மாதிரி எண்டு இதைச் சொல்லாமல் என்னை அறிமுகப்படுத்தமாட்டாவே,"

இது என்ன சங்கடம், கேள்வியும் பதிலும் தனதாக இருக்க நான் என்ன சொல்ல வேண்டி இருக்கு என எண்ணிய வனாய், ''ஓ... ஓ... நீங்கதான் அந்த அக்காவா?'' என்றேன்.

''பார்த்தீங்களா, பார்த்தீங்களா, அந்த அக்காவா எண்டு குத்திக் கேக்கிறீங்களே'' என சிடு சிடுத்தவளை,

''இல்லே இல்லே, அக்கா ஒண்டு வீட்டிலே இருக்கிறு. மற்றவங்க வேலைக்குப் போவாங்க எண்டு சொன்னவ'' என்று சமாளிக்க முயன்றேன்.

''நேரில் கதைக்க மாட்டினம் பிறகு அவ என்னைத் தண்டச் சோறு எண்டும் சொன்னுவா? வீட்டில் இருந்தா தண்டச் சோறு? வேலைக்குப் போயிற்று வாறவங்க எல்லாம் நான் சமைச்ச சோற்றைததானே சாபபிடுறுங்க......''

இதென்ன வம்பாப்போச்சு, ஒருத்தரையுமே காணவில்லையே என நோட்டம் விட்டேன் நான்.

''எனக்குத் தெரியும், உங்களுக்கு என்னோட கதைக்கப் பிடிக்கேல்லே தானே? ஆரு வந்தாலும் இப்படித்தான் என்னைப்பற்றி முன்கூட்டியே அவங்க சொல்லி, வாறவங்களும் என்னோடு கதைக்க அஞ்சுறுங்க பாரன்,

ஏங்க நான் அப்படியா இருக்கிறேன்? நீங்க வர்றமாதிரி யாரும் வீட்டிற்கு வந்தா வரவேற்கிறதில்லேயா? அப்ப மூஞ்சியைத் தொங்கப் போட்டு இருந்தாலும் சிடு மூஞ்சி எண்டு பட்டம் கட்டிவிடுவாங்க. சரி இடக்கு நீங்க எப்படி நினைச்சா என்ன, எல்லோரும் அப்படித்தானே''

''இல்லே புவனு உமது நல்ல மனத்தை எல்லோரும் புரியவில்லே, அது தான்...'' என்றேன்.

''ஓ! பெயர்கூட சொன்னுங்களா? அப்ப நீங்க புரிஞ்சிட்டீங்களா? வீட்டுக்காரர் கோயிலுக்குப் போயிற்ருங்க, இப்ப

வந்திடுவாங்க வந்தா திட்டுவாங்கள் அலட்டிறியா எண்டு, நான் என்ன அலட்டிறனு சொல்லுங்க, ஒருதரும் புரிஞ்சு கொள்ளுறுங்க இல்லையே என்ன..."

"சரி, சரி இப்ப வந்திருவாங்களா?" என்றேன்.

"ஏன் உங்களுக்கு போறிங்காய் இருக்கா, உங்களுக்கு பாட்டில விருப்பம் இருக்கா, என்ன பாட்டுப் பிடிக்கும்? றேடியோ போட கரண்டும் கட்டாச்சு, நான் பாடட்டா?" தொடர்ந்தாள் கேள்வியும் பதிலுமாய்.

உண்மையில் உள்ளத்துள் அடக்கப்படும் சிந்தனைகளை பலர் புரியாது ஒதுக்குவதால் ஏற்ப்பட்ட தாக்கத்தின் விளைவு தான் போலும் எனப்பட்டது. அவள் விடவில்லை தொடர்ந்தாள்.

"ஓ! நீங்க பாடக் கேட்பியளாக்கும், நான் பாட மாட்டேன். பிறகு நீங்களும் அவர்களைப்போல் எனக்கும் பட்டம் கட்டிவிடுவீர்கள் அப்படித்தானே?" என்றுள். ஆம என்றுலும் இல்லை என்றுலும் தண்டனை தனக்காகவே என எடுத்துவிடுவாள் எனத் தலை ஆட்டினேன்.

"அப்ப உங்களுக்காக நான் பாடப்போறேன், என்ன பாட்டுப் பிடிக்கும் உங்களுக்கு, புதுசா? பழசா?"

நான் எதுவுமே கூறவில்லை, "சரி சரி நீங்கள் கூறு விட்டால் நானுகப் படிக்கிறேன். இன்று என்ன கிழமை ஞாயிறு என்ன, அப்போ ஞாயிறு ஒளி மழையில்..." எனப் பாடி பரவசமூட்டினுள், புன்னகையுடன் தன் குரல் வளத்தால் இனிமையாகப் பாடியபோது அவளது கண்களின் கண்ணீர்த் துளிகளை கன்னத்தேபட்டு தெறித்தன. விரக்தியின் விளைவாக கொட்டிச் சிதறவைத்த நினைவுகளை மீட்ட முயன்றேன்.

''போதும் போதும் நன்ருகப் பாடினீர். சங்கீதம் கற்கின்றீரா'' என்றேன்,

''ஏன் சொன்னுளா அவள்? நான் தான் சங்கீதத்தில் பள்ளியில் சித்தியடைந்தது. ஆனு வீட்டில் அவவுக்குத்தான் சங்கீதம் படிப்பிக்கிருங்க, இப்பவெல்லாம் வெளியில் அனுப்பியும் சங்கீதம்தான் படிப்பிக்கினம். அதை எனக்குப் படிப்பிக்க மறுக்கினம். என்னில் அவ்வளவு அக்கறை இல்லை. அதுபற்றித் தினமும் கேட்டால் சண்டை வரும், பிறகென்ன அகிம்சைப் போராட்டம்தான்'' என தனது பாடப் புத்தகக் கட்டுக்களை எடுத்துக் காட்டினுள். உண்மையில் ஆர்வமிகுதி அவள் பேச்சில் தொனித்தது.

''எது வரை படித்தீர்?''

''O / L வரை படித்தேன், சங்கீத சபை நடாத்தும் பரீட்சைக்கு சென்ற போதுதான் அங்கு எற்பட்ட தாக்கம். அதை வீட்டில் சொன்னதால் அதுக்குக் கிடைத்த தண்டனை ''உனக்கு விசர், உனக்கு நூல் கட்ட வேண்டும்'' என வாறவர்கள், இருப்பவர்கள், உறவினர்களுக்கு என்னைப் பற்றியே கூறி, இப்போ எங்கு சென்றுலும், அது ஒரு இது என கூறுவது எல்லோர் வாயிலும் சகஜமாகிவிட்டது. பார்த்தீங்களா! பார்த்தீங்களா! என்னை யாரும் புரியமாட்டேன் எண்கிறுர்களே'' என கண்ணீர் கதையை ஓடவிட்டாள் புவனு.

''அப்படி என்ன நடந்தது, பரீட்சைக்குப் போகும் போது'' என்றேன், சத்தம் போட்டு அழுதேவிட்டாள். அந்த நிகழ்ச்சியை மனதுக்கு எடுத்தாலே அவளுக்குப் பிடிக்காது என தங்கை கலா சொன்னது நினைவுக்கு வந்தது. இன்று தான் நேரில் கண்டேன்.

''ஏதோ தவருகக் கேட்டால் தயவு செய்து மன்னிக்கவும்'' என மன்னிப்புக் கோர மீண்டும் பழைய நிலையில் முக மலர்வைத் தந்து,

''இது என்ன பெரிது' மன்னிக்க, மன்னிக்க முடியாத பல வார்த்தைகள் பலரிடம் கேட்ட எனக்கு...' என புன்னகை பூத்த வண்ணம் பூமியைப் பார்த்தவாறு'

''இதுவரை கதைத்ததை வீட்டாருக்கு கூறிவிடாதேங்க, பின் இந்த வாரம் திட்டுவதற்கு இது ஒரு சாட்டாகிவிடும் அவர்களுக்கு'' என்ருள். இத்தனையும் தாங்கும் அந்த இளம் உள்ளத்தின் குமுறல்களைக்கலைத்த அந்தப் படலைச் சத்தம் பல மாற்றத்துடன், பதட்ட உணர்வுகளுடன், வாசலைப் பார்க்கவைத்தது.

''ஓ...மகாணு எப்போ வந்திங்கள்? கண நேரமாகி விட்டதா?...'' கலாவின் குரல்வருகையைத் தொடர்ந்து அம்மாவும்.

''தம்பி எப்போ வந்தீர்கள்...? ஓ! நீயா இருக்கிருய், அப்ப கணக்க அளந்திருப்பாளே, போ, போ, தேத்தண்ணி குடுத்தியா? வெறும் அலட்டலாய் இருந்திருக்குமே தம்பிக்கு, தம்பி அது ஒரு இது ஏதும் சொல்லியிருந்தால் பெரிதாய் எடுக்காதையும். அது அப்படித்தான்'' என அவளெதிரே சொன்ன வார்த்தைகள் எனக்கு ஏதோபோல் இருந்தது. பாவம் அவள் நிலை, அவள் உள்ளே சென்று விட்டாள் மௌனியாக.

புவனுவின் தேநீரை பெற்று வந்து தந்தாள் கலா, எல்லாரும் என் முன் தங்கள் கதாகாலட்சேபத்தை தொடங்கினர். அகதியாக அவலப்பட்ட செய்திகளுடன், அழிவின் விபரப் பட்டியலையும், ஏனையோரின் பெருமைகளையும் ஒருவர் மாறி ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு கூறி முடிக்க புவனு மௌனியாக நின்று தன் நிலையில் உணர்வை வெளிப்படுத்திஞள். அம்மா ஒருமுறை திரும்பிப் பார்த்தவளாய்,

''நீ இங்குதான் நிற்கிறியா போ போ உள்ளே'' என அவள் கதையை விபரித்தாள்.

''தம்பி இவளுக்கு ஏதும் வைத்தியம் செய்தாலும் திருந்துதில்லை. உனக்கு யாரையும் தெரியுமா...'' என்றாள் அவளின் அன்னை.

''ஏன் என்ன வருத்தம் நன்றாகத் தானே இருக்கிறா'' என்றேன்.

''தம்பி அது ஒரு இது, விசர்தான் பார்த்தீரே, இவ்வளவு சொல்லியும் போகேல்ல பார்த்தீரா'' என்றாள்.

''அம்மா, குறை நினைக்காதையுங்கோ, இப்ப பார்த்தால் வீட்டில இருக்கிற உங்களால்தான் விசர் எண்டு சொல்லல முடியிதேதவிர அவவுக்கு எதுவும் இல்லை, நல்லாத்தான் கதைக்கிறா. அடிக்கடி சொல்லுற ஆக்களுக்குத்தான் வைத்தியம் தேவை போல...'' என்றேன், அவளும் ஆமோதித்தவளாய் முகமலர்வுடன் உள்ளே சென்று விட்டாள். தாயார் தொடர்ந்தாள்.

''தம்பிக்கு விளங்கேல்ல எங்கடதொல்லை''.

''அம்மா தங்கள் உள்ளக் குமுறலை சொல்லித் தீர்க்க அதைக் கேட்டு ஆறுதல் சொல்ல உணர்ச்சிகளைப் பகிர்ந்து கொள்ள, இளமை உள்ளங்களைப் புரிந்து ஆறுதல் சொல்லும் ஸ்தானத்தில் இருக்கும் நீங்களே இப்படி இருந்தால் அவள் யாரிடம் சொல்வாள்...? தன் குறைகளைச் சொல்ல, அதை அனுதாபத்துடன் கேட்டு அதற்கு ஆறுதல் கூற வேண்டிய நீங்களே அவளுக்கு உளபபாதிபபை ஏற்படுத்தக்கூடிய வகையில், அவளைப் பற்றி அவளுக்கு நேரிலேயே மற்றவர்களுக்குச் சொல்வது, அவளை எவ்வளவு பாதிக்கும் என்பதை புரிந்து கொள்ள வில்லையே நீங்கள்'' என்றேன்.

''தம்பி என்ன குறைவிட்டோம் அவளுக்கு''?

''அவளின் வயதிற்கேற்ற வளர்த்தியைத்தான் பார்த்தீர்கள், உணவை, உடையைக் கொடுத்தால் மட்டும் போதுமா? உளத் தேவைகளைப் புரிந்து வாழவைக்க முடியவில்லையே உங்களால். இப்படி என்போன்ற பலருக்கு உங்கள் மகளைப் பற்றி நீங்களே கூறினால் இவளது எதிர்காலம் என்னவது? அது மட்டும் மந்திரவாதி பார்த்துக் கொள்வான் எல்லாத்தையும் நூலால் கட்டி வைப்பான் என்று நினைக்கும் உங்கள் உள்ளத்தில் ஒரு முறை, அவள் வயது, தோற்றம், எதிர்காலம் என்ற நிலையிலிருந்து சிந்தித்துப் பாருங்கள். அவளும் உங்கள் பிள்ளையில் ஒன்று, சகோதரர்கள் அவளை அக்கா ஸ்தானத்தில் வைத்து ஆலோசனை கேட்க, அன்பைப் பகிர அவளது பொறுப்பை உணர சந்தர்ப்பங்கள் கொடுங்களேன்'' என்றேன்.

தாயாரின் கண்ணீரில் தான் செய்த தவற்றைப் புரிந்ததற்கான பதில் தெரிந்தது. புவனாவின் புன்சிரிப்பில் புது வாழ்வு துளிர்விட்டது.

# 5

## பேரம்

விடிந்தால் தங்கையின் திருமணம். சகல ஆயத்தங்களையும் செய்வதில் மும்முரமாக ஈடுபட்டான் மதன். சுமதிக்கு இனி ஒரு திருமணமா? என கதைகளை கேட்டவர்க்கே திகைப்பு, அவள் வயதுக்கு ஏற்ற வரன் தேடுவதே குதிரைக் கொம்பான கதைதான். இருந்தும் பல கோணத்தில் பணத்தை விட்டு தேடியதால் இந்த சம்பந்தம் சாத்தியமானது. அப்பா அம்மா இல்லா குறையை மதனுக்கு தெரிய விடாமல் தனது கடின உழைப்பால் படிக்க வைத்ததை ஒரு கணம் எண்ணிப் பார்த்தான் மதன். இன்று நோர்வேயில உழைத்து செல்வத்தைச் சேர்த்தாலும், தங்கைக்கு வாழ்க்கை அமையவில்லையே என்றால் இடபணம் இருந்தென்ன என்று விரக்தியுற்று இருந்தவனுக்கு நல்ல செய்தி மன நிறைவை தந்ததில் வியப்பில்லைத்தான்.

தரகர் பேச்சுக்கு மறுப்பில்லாது உழைப்பு எல்லாம் அவள் பெயருக்கே எனவும் ஒப்புக்கொண்டது மதனின் மனைவிக்கு ஏதோ பிடிக்கவில்லைதான். இருப்பினும் தன் எதிர்ப்புக் குரல் ஏறாது என்று உணர்ந்து கொண்டவள் மாப்பிளை வீட்டாருடன் நெருங்கி உறவு கொண்டாள். அரச மட்டத்து பேச்சு வார்த்தை போல் திருமண பேச்சின் இறுதிச்சுற்றுக்கு இரவு மாப்பிளை வீட்டார் வந்து பூர்வாங்க பேச்சை ஆரம்

பித்தனர். இது வரை கேளாத புது வார்த்தை ஒன்று பல மாக ஒலித்தது.

''அப்பா அம்மா இல்லாமல் அண்ணன் படிக்கவும உதவி, இந்த வீடு வாசலையும் இப்படி வைத்திருக்க எப்படி வந்தது பணம்? அப்படி என்ன பெரிய உழைப்பு உழைச்சுப் போட்டா சுமதி?'' என மாப்பிளேயின் அக்கா குத்துக் கதை யால் மகிழ்வை குத்தி கேட்க, பொறுக்க வேண்டிய நேரம் இது என பொறுமைக்கு இலக்கணமானுன் மதன.

''அப்பதம்பி அக்கா சேர்த்த வீடு வளவு எண்டால் கலி யாணத்தின் பின் உமக்கு இதில ஏதும் பங்கு இருக்கோ?'' என மாப்பிளே வீட்டாரின் தொலைபேசிபோல் இயங்கிக் கொண்டிருந்தார் தரகர் முருகேசு.

''இது வரை ஒப்புக்கொண்டதுதான். அதற்கு மேல் எண்டாலும் அக்காவுக்காக விட்டுக்கொடன் தம்பி...'' என இளகிய இரும்பை அடிப்பது போல் பேரங்கள் பல கோணங்களானது. இது வரை பொறுத்த அவன் மனைவி கமலம் ஏதோ வழியில் தலைப் போட முயன்ருள். ''தண் ணீரில் சீனி சேர்நதால் பின் தண்ணீரைப் பிரிக்க முடியாது. அது போல் தான் எல்லாம். கொடுத்தால் பின் எமக்கெண்டு என்ன இருக்கு...''. என தேனீர் கோப்பையுடன் கதை கொண்டு வநதாள்.

''பிள்ளை உனக்கு தெரியுமா? நீ கூட வெளிநாட்டில் தம்பியை முடிக்கேக்க ஏதும் குடுக்கேல்ல தானே? ஆனுல் இந்த பணம் எல்லாம் எங்கால வந்தது? தாரமிழந்தவனின்ரை பிள்ளை வளர்க்கப் போனதாலதானே...... ''என முணு முணுத்தாள மூதாட்டி ஒருத்தி.

''அப்படியும் ஒரு சங்கதியே''? என குசுகுசுத்த மாப்பிளை வீட்டார் பெரிய தவறையே மறைப்பது போல் விடயத்தையே சொல்லி தம் கருத்தில் கவனமாயிருந்தனர்.

எல்லாவற்றையும் அவதானித்திருந்த மதனின் மனதில் அவள செய்த பணிக்கு உதவிய பெரியவரின் உதவிக் கரம் கூட அவ்வீட்டிற்கு விழுந்த ஷெல் போல் பட்டது. உண் மையில் அப்படி ஒரு தொடர்பால் தான் சேர்த்தால் கூட அந்த வீட்டை அவர்களுக்கு தாரைவார்த்தால் அவளை கற்புக் கரசி என போற்றி விடுவார்கள் போல் அவர்களின் உரை யாடல் வலுத்தது. மதனின் வார்த்தைகள் மின்னலைப் போல் வெடித்தது.

''இது வரை பொருளிற் பேரம் பேசிவிட்டீர்கள் பொறுத்தேன், எதையும் பணத்தால் நிரப்பலாம் என்றால் வாழ்நாட்களை வார்த்தை வடுக்களால் சுட்டெரிக்கிறீர்களே, பெண்களின் வார்த்தைகள்தான் எத்தனை பெண்களின் வாழ்க்கைக்கே வடுவாக்கி வாழா வெட்டியாக்கி விடுகிறது. தன் இனத்தை தான் அழிக்கும் கொடுமைக்கு இப்படி எத்தனை பெண்கள் ஆளாகின்றார்கள்.'' என பேச்சை இடை நிறுத்தி வெளியேற முயன்ற போது சுமதியின் குரல் எல்லோரையும் சிந்திக்க வைத்தது.

''தம்பி இவர்கள் என்னை மட்டுமா? இந்த சமூகத்தில் தம்மையே தியாகம் செய்ய முன்வருபவர்களையும் உடன் பிறப் புக்களான நல் உள்ளங்களையும் காயப்படுத்தக் கூடிய நச்சுப் பாம்புகள். எதைச் சொல்லியாவது பொருள் சேர்க்கத் துடிக் கும் இவர்களும் ஒருவகை தாசிகுலம்தான். பொருளுக்காக எதையும் செய்வார்கள் இப்படி என்னைப் போல் எத்தனை பேர் வார்த்தை வடுக்களால் வாழ்விழந்து இருக்கிறார்கள். அவர்களையும் இவர்களிடம் இருந்து காப்பாற்ற என் முடி வையேநான் மாற்றிவிடடேன்''

''இல்லை அக்கா இல்லை, அவசரப்பட்டு. முடிவுகள் எதையும் எடுத்திராதை. நல்ல இடத்தில உனக்கு நான் நல்ல கலியாணம் செய்து வைக்கிறன்''.

தம்பி வாயைக் கட்டிவயிற்றைக் கட்டி பின் வாழ்விழந்து நிற்பதை விட இவர்களுக்கும் வாழ்ந்து காட்ட என் சீதனப் பணத்தையே மூலதனமாக்கி என்போன்ற பலருக்கும் இங்கு வாழ்வகம் ஒன்று அமைக்கப் போறன், அவர்களும் உழைச்சு தன்மானத்தோடு வாழ அவர்களை விரும்பி ஏற்க வருபவர்களுக்குத்தான் வாழ்க்கை அமைத்து கொடுக்கப் போறன். விற்பனைப் பொருளாய் அல்ல, விலைமாதராகவும் அல்ல, வாழ்க்கைத் துணைவியாக ஏற்க வாறவங்களைத்தான் இந்த இல்லத்தில் படியேற வைக்கப் போறன். ஒரு விதை அழிந்தால் தான் பல உயிர் வாழலாம் என்றால் அதற்கு என்னை பயன்படுத்தலாம் தானே. இதற்கு நீ தடையாய் இராது துணையாய் இரு தம்பி,

சொத்துத் தேடும் சோம்பேறிகளுக்கு பேரம் பேச இங்கு இடமில்லை. வசைபாடும் கூட்டத்துக்கு நல்ல பாடம் கற்பிக்கும் வரைக்கும் இந்தவாழ்க்கை நீடிக்கத்தான் போகிறது'• என்ற வார்த்தைகள் அவர்களைச் சுட்டெரிக்க அவர்கள் அங்கிருந்து கலைந்தனர்.

6

# சிறை

"பாரன் அந்தப் பிள்ளையை இப்படி போட்டு அடிக்கிருனே. அவள் சுயநினைவில் இருந்தால் தானே, யாரும் தடுக்கமாட்டாங்களாமே?" என்ற மூதாட்டியின் குரலில் இரக்கத்தொனி, வழிப்போக்கரோடு போன எனக்கு சுள் என சுட்டு திரும்பிப் பார்த்தேன்.

அவன் தன் மனைவி என்ற உரிமையோடுதான் அவளை இழுத்து செல்கிருன். இதில் எபபடி நான் தலையிடுவது என்ற தயக்கத்தோடு அநத மூதாட்டியிடம் சென்றேன்,

"ஆச்சி யாரந்தப் பிள்ளை அவன் மனைவிதானே?"

"எடா தம்பி மனைவியாயிருந்தாலென்ன மகளாயிருந்தாலென்ன இப்படி வீதியில் அவன் திட்டுக்கும் அடிக்கும் பொறுமையோடு கேட்க வேண்டும் எண்டா, அது அடிமை என்ற எண்ணத்திலதானே நடாத்திருங்கள. இதை யாரும் கேட்கவே கூடாதாப்பா?" என்ருள் பொல்லாத கோபத்தை தள்ளாத வயதிலும் ஞாயம் கேட்டு.

நான் மௌனியாய் நின்றேன். அப்போது, "என் தம்பி... நீ கூட வருங்காலத்தில இப்படித்தான் செய்வியோ?"

''ஆச்சி, அவன் குடியில செய்யிறது எது எண்டு தெரியா மத்தான் இப்படிச் செய்யிருன் போல.''

''அதுக்கு அந்த அப்பாவிப் பொம்பிளை தான் கிடைச்சா ளோ? கண்டதையும் குடிச்சிட்டு திரியிறவனுக்கு எதுக் கடா தம்பி பெண்டிலும் பிள்ளையும்?''

''ஆச்சி உங்களுக்கு தெரிஞ்ச குடும்பமா ஆச்சி அது?''

''எட தம்பி அந்தக் கலிசறப் பயலை அப்ப இருந்தே தெரியும். கள்ளத் தேங்காய், ஆடுகளை களவெடுத்து கள் ளுக் குடிச்சுத் திரிஞ்சவன். இப்ப எல்லாம் கஞ்சா, சாரா யம் எண்டு புதுசா எல்லாம்குடிச்சு காற்சட்டை போட் டாப்போல மாறிடுவானே? அவள் பாவம், அந்தச் சட் டம்பி வாத்தியாரின்ர மகள், இப்பிடி இந்தக் குடும்பத்தில் வந்து பிள்ளை குட்டியளோட அழியுது பார்'' என்ருள் விசனத்துடன்.

பாடசாலை, வீடு என்று திரிந்த எனக்கு இந்தக்காட்சி கள் புதிதாக இருந்தாலும் உலகிலும் சமுதாய மட்டத்தில் எத்தனையோ அனுபவங்களையும் அறிய வேண்டும்என்ற ஆவல் கொண்டவனுக சமூக பணிகளின் நாட்டம் பலரை சந்திக்க வைத்தது.

ஊரில் இல்லாத காலம் உயர்ந்த சிந்தனையுடன் தலைநக ரில் படிப்புக்கென்று காலத்தைப் போக்கியபோது அங் கிருந்து, சொந்த ஊரை நினைத்துப் பார்ப்பது உண்டு.

பின்தங்கிய கிராமமாக இருந்தாலும் வீட்டில் சட்ட திட்டங்களும், கட்டுப்பாடுகளும் உள்ளதுபோல் படிக்க என்று வெளியில் புறப்பட்ட பின் எனக்கு நான் தான் எல்லாவற்றையும் கட்டுப்படுத்த வேண்டும். அந்த வகையில் வரவுக்கு ஏற்ற வாடகை பணத்தோடு பரீட்சைக்கான செலவு ரீயூசன் இவற்றுக்கான வரவு செலவுகளை திட்டமிடாவிட்டால்

அந்த மாதம் திண்டாட்டம் தான். இதனை அனுபவத்தில் கண்ட பின் தான் நான் கூட திட்டமிட்டேன்.

அந்த ஆரம்ப நினைவுகளை பள்ளி அனுபவங்கள் தான் கற்றுத் தந்தன. அந்த நட்பில் வளர்ந்த எனது அயல் கிராமத்தில் உள்ள அவன வீடுக்குச் சென்றேன்,

அதுவும் ஒரு கிராமம். ஆனால் சற்று வளர்ச்சி அடைந்து வசதி பெற்று இருப்பது' அங்கு ஓங்கி உயர்ந்த அன்னனக் களைக் கண்ட போது தெரிந்தது. அதன் வளர்ச்சி அந்நிய நாட்டின் உழைப்பால் உயர்ந்த இல்லங்களை கண்ட போது கட்டிடங்கள் தான் உயருகிறதே அதை கட்டியவர் இன்னும் அகதியாக அயல் நாட்டில் வாழ்வதை எண்ணும் போது கவலைதான் உறுத்தியது.

பள்ளி வாழ்வில் தொடர்ந்த நண்பன் சேகரின் இல் லத்தை அவன் கூறியபடி ஒருவாறு கண்டுபிடித்து சந்தித்த மகிழ்வு, பழைய பல கதைகளை இரை மீட்டவைத்தது, எமக்கு கல்வி கற்பித்த கல்லூரி அதிபர் சட்டநாதரும் இக் கிராமத் தில் வாழ்ந்து மாரடைப்பால் இறந்ததாக சேகர் கூறியதும், எமது வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருந்தவரின் இல்லம் சென்றுவர ஆவல் கொண்டபோது, அவனே அதிபரின் இல்லம் சென்றுவர அழைத்தான்.

செல்லும் வழியில் நான் கண்டு வந்த அந்த நிகழ்ச்சியை அவனிடம் கூறியபோது அவன் கூட சொன்னான். ''கணேஸ் கட்டிடங்கள் தான் உயருகின்றதே ஒழிய மனித மனங்கள் இன்னும் மாறதுப் போகிறதே பாத்தியாடா''? என்றான்.

பாடசாலையில் இருப்பது போல் வீட்டிலும் அவரைத் தரிசித்தால் நேரில் கதைக்க ஏற்படும் தயக்கம் போன்று தான, அதிபரின் வீட்டில் காலடி வைக்கும் போதும் அவரது

கட்டுப்பாடுகள் ஞாபகமூட்டின. பேருக்கு ஏற்றவர்போல் சட்டம்பிக்கு வைததனர் சட்டநாதர் என்று. சரியாய்ப் பொருந்தும் அவருக்கு அந்தப் பெயர்.

சேகர் அடிக்கடி செல்வதால் அவனது துணை எனக்கு துணிவைத் தந்தது. ''கணேஸ் ஏன்ரா பதடப்படுறே, சேர் செத்துத்தான் மூன்று வருடமாகி விட்டதுவே. இப்போ அவர் வீடடிற்கு செல்வதில் என்னடா பயம். நான் முன்னரை விட இப்போ அடிக்கடி போவதால் உன்னை அங்கு ஒன்றும் விழுங்விட மாட்டாங்கள்'' என கூறியபோது என்னையறியா திருந்த பய உணர்வு கலைந்தது.

சேகர் உரிமையுள்ள வீட்டில் நுழைவது போல் உள்ளே சென்றான். அந்த அதிபர் வீடடிலும் ஏதோ எதிர்பார்த்த வருகை போன்று பலரும் அறிமுகமானார்கள். மகள் சுமதி, பாமா, தம்பி மூர்த்தி என அறிமுகம் செய்த தாயார், ''தம்பி யை சின்னனிலே கண்டனான். நடுங்கி நடுங்கி அப்பாவோட கதைக்கிறது எல்லாம் ஞாபகம் இருக்கு'' என்று கூறியபோது மீண்டும் இரை மீட்ட ஞாபகம், அந்த பய உணர்வு மனதில் பதிந்தது.

''தம்பி, இருங்கோ, கோப்பி கொண்டுவாறன்'' என குசினிக்குள் விரைந்தாள் அதிபரின் மனைவி.

''சேகர் என்ன இரண்டு வாரமா இந்தப்பக்கம் வரவில்லை என்ன புதிய நியூஸ்'' என சுமதியின் உரிமைக் குரல் நண்ப னின் உறவை வலுவூட்டுவதுபோல் இருந்தது. ''இப்படித்தான் ஒரு வாரம் தான் வரவில்லை, அதுக்கிடையில் பெருக்கி, பிரித்து சொன்னால் எப்படி? இதுக்கெல்லாம் அப்பாவின் குட்டு வேண்டி படிச்சாததானே மண்டையில் ஏறும்'' என்றான் சேகர்.

''இவனெல்லாம் அப்படி என்றால் தான் படிப்பாரோ?'' என என்னையும் தங்கள் பேச்சில் இழுத்த சுமதியின் குறும்பைக் கேட்டு.

''அப்பாவிடம் படித்த நாம் பின் நிற்பதில்லை. பின் வாங்கில் இருந்தவர்கள்தான் அவரின் அடிக்கு பயந்தே பள்ளிக்கு கட் அடிச்சிடு வாங்க.''

''ஓ... அப்ப நீங்களும் ஆமாசாமிகள் மாதிரி அடங்கி ஒடுங்கி நிற்பீங்களாக்கும்'' என்றாள்.

''ஏன் எங்களை மட்டும் சொல்லுறியள். முன்பு பள்ளியில் படிக்கும் காலத்தில் உங்கள் குவாட்டசிற்கு வந்தாலும் உங்கள் நிலையும் அப்படித்தானே இருந்தது. எத்தனை நாள் வீட்டில் முழங்காலில் இருக்கக் கண்டிருக்கிறேன்.''

''அது அந்தக்காலம். இப்போ எல்லாம் சரிவருமா?

''உங்களுக்கொரு அக்கா இருந்தாவே. உங்க அக்காவைபற்றி சொல்லவே இல்லையே? எங்கே இப்போ கம்பசிலா? அல்லது வெளி நாட்டிலா......?''

''அவளா... உங்கள் ஊரில்தான் குடித்தனமாகி விட்டாள்.''

''எங்கள் ஊரில் உங்கள் அக்காவா?''

''ஓம் உங்கள் கிராமத்தில்தான் குடிகாற குடித்தனம் நடாத்திரு''

''என்ன சொல்லுகிறீர் சுமதி, உங்கள் நிலை என்ன, வளர்ந்த சூழல் என்ன? நான் வரும் ஒவ்வொரு தடவையும் உங்கள் வீட்டை ஒரு கன்னியர்மடம் நடாத்துகிறார் மாஸ்ரர் எண்டு கதைபார்களே, அப்படிப்பட்ட வளர்ப்பில் எப்படி இந்த மாற்றம்! நம்ப முடியவில்லையே''

''நீங்கள் சொன்னீர்களே அந்த வளர்ப்பு என்று, அந்த வளர்ப்பால் ஏற்பட்டதுதான் கணேஸ் இந்த மாற்றம்''

''சேகர் நீ கூட கூறவில்லையே இதை''

''கணேஸ் எனக்கும் இப்போதுதான் தெரியுமடா இந்தக் கதையை. ஏன் சுமதி இதை எனக்குக்கூட சொல்லவில்லை?''

''இதென்ன பெரிய சாதனையா சொல்லிமகிழ சேகர், அதை மறைத்துவிட்டோம். அதனால் அதை மறந்துவிட்டோம். அவள் மட்டுமல்ல, அப்பா இருந்திருந்தால் நான் கூட அப்படித்தான் முடிவு எடுத்திருடபேன். இந்த சிறை வாழ்க்கையில் இருந்து விடுபட...'' என கண்ணீர்த் துளிகளைச் சிதறவிட்டான்.

''ஊரே போற்றும் மாஸ்ரருக்கு அப்படி என்ன அறிவில்லை யெண்டா சொல்லுறீர்கள்''

''உங்களுக்கு எட்டு மணித்தியாலத்தில் 2 – 3 மணித்தியால வாழ்க்கையை அவரோடு மகிழ்வாக படிக்க முடியாது சட்டம் போட்டு அடிக்கு பயந்து வாழ்ந்து விடலாம். ஆனால் நாம் தினம் — 24 மணி நேர சிறைக்குள் தெரியுமா? வீட்டில் கூட எங்கு செல்வது, என்ன செய்வது, எதை உடுத்துவது என்பதை அவர் தானே திட்டமிடுகிறார். இங்குள்ள மிருகங்களுக்கும் எமக்கும் என்ன வித்தியாசம்? வெளி உலகத்தை அறியாத எங்களுக்கு யாராவது வெளி உறவை காட்ட முனைந்தால் யார்தான் அதைக்காண முயலமாட்டார்கள். இதில் அவளைச் சொல்லி என்ன குற்றம்? இப்பவும் சொல்லுறன் இந்த சூழலைக்கூட சந்தேகமாக எண்ணி தண்டனையும், கட்டுப்பாடும் இருந்திருக்கும். ஆதலால் அப்பா இன்று இருந்தாலும் அவளின் முடிவைத்தான் நானும் எடுத்திருப்பன். இது ஊருக்குத் தவறாகப்படலாம், ஆனால் நானும் இந்த சிறையில் இருந்து விடுபடத்தான் முயன்றிருப்பன்.''

என தன் கண்ணீர் துளிகள் கொட்ட தன் மனக்குமுறலை சொல்லித் தீர்த்தாள்.

''அப்போ நான் கண்ட அந்தக் குடும்பம், உங்கள் சகோதரிதானு...? சேகர் நான் வரும் வழியில் சொன்னேனே அந்த குடிமகன் பற்றி...''

சேகர் தலையசைத்தவனாய், ''சுமதி நீர் நினைப்பதுபோல் வீடு சிறையானால் வெளி உலகம் உங்களுக்கு விடுதலை தரும் என்று மட்டும் எண்ணிவிடலாமா? இன்று அவள் படும் இன்னலை நீர் அறிவீரா?''

''சேகர் உமக்கு புரியவில்லை எமது சூழல், இருட்டுலகில் குருட்டாட்டம் தான் வீட்டினுள் நாம் கண்டது. இன்று நாம் என்ன தவறியாவிட்டோம்? இந்த தவறை காவல் காத்து கட்டிவைத்து காத்துத்தான் விட்டாரா அப்பா? அவர் உயிருக்கும் அது உலைவைத்துவிட்டதே. வெளி உலகை புரியாத அவள் கூட இந்த சிறையில் இருந்து விடுபட முனைந்தாள். இதனால் எதிர்பாராமல் விறகுவெட்ட வந்தவனே எங்கள் உறவையும் வெட்டி அழைத்துச் சென்றுவிட்டான். கவரிமானின் நிலையில் தான் வெளி உலகைப் புரியவிடாது காத்த அப்பா மானம் தாங்காது உயிரையும் விட்டார் பாத்தீரா?

இன்று நாம் கூட உழைத்துண்ண தினமும் எத்தனை பேரை எமது கந்தோர் வாழ்வில சந்திக்கின்றோம். இவை எல்லாம் எமக்கு எத்தனை படிப்பினையைத் தருகிறது. நாம் என்ன கெட்டா அழிந்து விட்டோம்'' என புயலில் சிக்கிய ஓடத்தின் கதை போன்று கூறுகையில், அம்மாவின் தேனீர் பரிமாற்றம் பழைய நினைவுகளுக்கு தரிப்பிடமானது.

''மகள், ரியூசனுக்கு சென்ற பாமாவையும், தம்பியையும் காணவில்லை பார்த்து வாவன் பிள்ளை.''

“என் அம்மா அவர்கள் வருவார்கள் தானே, வந்த வர்களோடு கதையுங்களேன்.”

“அதுதானே நீ கதைக்கிறய் தானே பிள்ளை”

“அம்மாவின் அடுப்படி வாழ்க்கையை மாற்ற யாரால் முடியும்? குடும்ப ஆரம்ப பாடசாலையாகவே குடும்ப பெண் களுக்கு கொடுத்துவைதது விடடார்களே” என்றுள சுமதி.

“என்னத்தில் குறை வைச்சவர் அப்பா, சும்மா இரு பிள்ளை, என்ன இருந்தாலும்......”

“சரி அம்மா சரி... கல்லானலும், புல்லானலும் என வத் காலத்து வேண்டாம்...”

சரி நேரமாகிவிட்டது நாங்களும் சென்று வரவேண்டும். இப்போ நீங்கள் மட்டுமா நாங்களும் அடக்கப்பட்டவர்கள் தான் வீட்டில். அப்படி ஒரு வாழ்க்கை நிலைதான்......’ என்று கூறி சென்றபோதுதான் சுமதியும் புரிநதுகொண் டாள இன்றைய சூழலை.

7

## சுமைகள்

அலைகடல் தாலாட்ட அருகே இருக்கும் தென்னை மரங்கள் தலையசைக்க, மணல்தறை தாண்டி ஆங்காங்கே குடில்களில் வாழும் மனித ஜீவன்கள் அன்றைய உணவுக்காக அங்குள்ள மண்வளத்தைத் தம் பலத்தால் வளப்படுத்தி உழைக்கும் உழைப்பாளர் கூட்டத்தில் அவனும் ஒருவனாக மருது தன் குடித்தனத்தை நடாத்தினான்.

முதலாளி பரமசிவத்திற்கு நம்பிக்கைக்குரியவன் மருது. மலாயன் தோட்டத்து வரவு செலவு கணக்கு பிள்ளைபோல் தன்னை நினைத்துக் கொள்வான். இதனால் மலாயன் பென்சனியர் பரமசிவத்திற்கு வருவாயைப் பெருக்குவதில் மருதுவின் பங்கு அதிகம் என்றே சொல்ல வேண்டும். அவனது பிறப்பும், அவனது வளர்த்தியும் போன்றுதான் அங்குள்ள பாத்திகள், கன்றுகள் வருவாய் தரும் தென்னை மரங்களும் பெரிய சோலையாகக் காட்சி தருகிறது.

மண்புட்டிகளை பேரம்பேசி விற்கும்போது தன்னை ஒரு முதலாளியாக நினைத்துக் கொள்வான் ஓடி ஓடி உழைத்தாலும மாதச் சம்பளம்தான் மருதவுக்கு. வருவாய் விலைவாசி ஏறினாலும் அவனது உழைப்பு 500/- ரூபாயுடன் அவன் குடும்பம் தங்கிய இல்லிடம் என ஒரு குடில் அமைத்து காவலுக்கு வைத்ததே பரமசிவத்தின் அருங்கொடையாக எண்ணிக் கொள்வான மருது.

பரமசிவத்தின் குடும்பத்தில் மக்கள் ஐந்து பேரும் சிறு வயதில் இருந்தே மருதுவின் தூக்கி வளர்த்த பிள்ளைகளாக இருந்தாலும் இன்று வெளிநாட்டில் பெரிய படிப்பு, பட்டம், பதவி, உழைப்பு என்று வளர்ந்துவிட்டாலும் தன்னைப்பற்றிக் கடிதத்தில் சுகசேமங்களை அப்பாவுக்கு எழுதிக் கேட்பதைப் பெரிய புகழ்ச்சியாக எண்ணிக் கொள்வான்.

குழந்தை குட்டிகளென்று பல்கிப் பெருகினுலும் காலச் சூழலில் இங்கு வருவதுமில்லை. அதனுல் பேரப்பிள்ளைகளை படங்களில் பார்ப்பதோடு பெருமூச்சும் முட்டி நிற்கும் பரமசிவத்திற்கு.

மருதுவின் குடும்பமும் மூத்தவளைத் திருமணம் செய்து கொடுத்து இளையவன் கமலுடன், கமலியும பள்ளி சென்று வரும் வாலிபப் பருவத்தில் தோட்ட வேலையில் பிள்ளைகளுடன் அவன் மனைவி கமலமும் இணைந்த உழைப்புக்கு ஏற்ற ஊதியம் இல்லாவிட்டாலும் பெரியவர் தோட்டத்தின் உரிமை உள்ளவன் என்ற பெருமையில் வாழ்கிறுன் மருது. இந்த உணர்வை அக்கிராமத்து சககுடிமக்களும் கூறுவதில் அவனுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. அதில் வரும் வருவாய்க்கு மட்டும் பரமசிவம் உரிமைக்காரன். இவனுக்குக் கிடைக்கும் நல்ல பெயர் ஒன்றே இவன் சேர்த்த சொத்துக்கள்.

''ஐயா இந்த முறை தேங்காய் விலை சூடாயிருக்கு. அதால வைச்சுக குடுக்கலாம் போல''.

''நீ சொன்னு சரி மருது. ஆளுகள்ளர் எடுக்காம பாக்கிறது உன் பொறுப்பு. வேலிகளையும் கவனிச்சுக்க வன்''.

''ஐயா ஒரு பிள்ளை தொடவிடுவனு? அவங்களை காலடி வைக்க எங்கட வீரய்யா விட்டிடுமோ? என தன் நாயைக்

காட்டிப் பெருமையுடன் கூறினுன். இப்படித் தன் குடும்பத்தையே அர்ப்பணித்த மருது போல் ஒரு பிறவி அவருக்குக் கிடைத்ததே அதிஷ்டம்தான்.

பத்து மைல் தாண்டிய அந்த நகரத்தில் அடுக்குமாடி வீட்டுச் சொந்தக்காரரான மலாயன் பென்சனியர் பரமசிவத்தின் குடும்பம் பல்கிப் பெருகி இப்போ வீடு பார்க்க என ஒண்டியாக ஒதுங்கிவிட்டார். இந்த வயதில் இனி ஒரு பயணமா? என எல்லோரையும் வெளிநாட்டில் அனுப்பி விட்டு வீட்டுக்கு விளக்கேற்ற இவர் மட்டும் இருப்பது அந்த மாளிகைக்கு அனுபவிக்க எவரும் இல்லையே என்ற ஏக்கப் பெருமூச்சோடு அடிக்கடி சொல்லிச் சலிப்பார்.

நாட்கள் நகர நகர சூழலும் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்பட்டது. பிரயாணத் தடைகளால் பிரதான வீதிப் பயணமும் வழக்கம் போல் இல்லை. பிரதான வீதி பிரமுகரெல்லாம் கிராமப்புறத்தே நாடத் தொடங்கினர். பரமசிவத்தாரோ சொத்தைப் பாதுகாக்க சொந்த உயிரைப் பணயமாக வைத்து அந்த மாளிகையிலேயே தஞ்சம் புகுந்தார். எந்த நிலையிலும் அவரது கவனமெல்லாம் தோட்டத்தில் வரும் வருமானத்தை மருதுவிடம் இருந்து பெறுவதில் மிகவும் கண்ணுக இருந்தார்.

மாதா மாதம் பரமசிவத்தின் வருகையைக் காணுவிட்டால் மருதுவே அவரிடம் வந்து தோட்டத்து விபரங்களைப் படம் பிடிதத்துக் காட்டுவது போல் விபரித்துச் சொல்லுவான். அதைவிட பரமசிவத்தின் குடையலான கேள்விகளில் எதையும் தவறிடவும் முடியாது.

அன்று பதிஞேராம் திகதி மருது தன் மகளின் பிரசவத்துக்காகப் புறப்பட்டு வந்தான். மகளைப் பிரசவ ஆசுப்பத்திரியில் சேர்த்து விட்டு மனைவி கமலத்தையும் மகளோடு துணையாக விட்டு முதலாளி பரமசிவத்திடம் சென்ருன்.

''என்ன மருது ...... போன கிழமைதானே வந்தனீ. இப்ப என்ன திடீரென்று ......''

''ஐயா மகள் பிரசவத்துக்கு எண்டு ஆசுப்பத்திரிக்கு கூட்டி வந்தனான். அதுதான் ......''

''சரி, சரி விட்டாச்சுத்தானே. தோட்டத்திலயும் ஒரு தரும் இல்ல. என்ன நடக்குதோ? ஆஞ்ச தேங்காய்களும் அப்படியே கிடக்கு. உரங்களும கொட்டில்ல கிடக்கு. இப்பிடி நீயும் இஞ்ச வந்திட்டா?''

''பிள்ளைகள் நிக்குதையா அங்க ...... மகளுக்கு ஒரு மாதிரி இருக்கு. பறுவமும் வேற ஆண்டைக்கு ...... அதால பாத்திட்டுப் போவம் எண்டுதான் ......''

''என்ன, மருது. நீதான் பெறுவிக்கிறவள் மாதிரி...... எது எண்டாலும் மனிசி நிக்குதுதானே நீயும் இஞ்ச நிண்டு என்னத்தைக் கிளிக்கப் போறாய். ஆசுபபத்திரியில உன்னை தங்கத்தான் விடுவினமே?''

''அது சரிதானய்யா. ஆனா ......''

''என்ன, ஆனா இப்ப போனாத்தானே போய்ச் சேரலாம.''

''ஐயா, இரண்டு மணி கடைசி பஸ்சும் போய்ச்சுது. வந்தோட என்னண்டு அறிஞ்சிட்டுப் போவம் எண்டு தான் ......''

''ஏதோ பெரிசா அப்பிடி என்னத்தத்தான் காணப் போறாய். ஏலும் எண்டா வந்து சொல்லுங்கள்தானே ...''

அவரது புகைச்சலில் மன எரிச்சல் புலப்பட்டது. பரம சிவத்தின் வாழ்வில் இன்று அனுபவித்து வருவது எல்லாம்

இருக்கும் பணத்தைக் காக்கவே ஒழிய நல்ல உறவை உண ராத மரத்துபபோன மானுடமாக மாறிவிட்டார் என்பதை அவரது செயல்கள் புலப்படுத்தினுலும் மருதுவின் மனமோ பேரப்பிள்ளையைக் காணத் துடித்தது.

அடுப்பு மூளாத அடுக்குமாடி வீட்டில் அவனுக்கும் இருப்பிடம் தர மனம் இல்லாத நிலையில் தானே அவர் கூற்று அழுத்தியதை உணர்ந்தவன், ஆஸ்பத்திரி வாசலுக்கே விடைபெறறு விரநதான்.

மழைத்தூறலுடன் மின் துண்டிப்பும் அவனுக்கு சொந்தக் கிராமத்தில நடப்பது போன்ற உணர்வைத தந்தது. அந்த இருள் அவனுக்குப் புதிதாகப் படவிலலை நகரப்பகுதியான தால் இடையிடையே வரும் வாகன இரைச்சலும் ஒளிப்பிரவாக மும் மின்னலைப்போல் தோன்றி மறைவதில் அவன் செல்லும் பாதையில் உள்ள கிடங்குகளிலிருநதும் தப்பிக்க முடிந்தது.

பிரதான சந்தியை அண்மித்தவனுக்கு முகத்தில் பட்ட ஒளி அவன் கண்களைக் கூச வைத்தது. அதில் முனங்கலுடன் உறுமிச் செல்லும் வாகனமொன்று அவனைக் கடந்ததும் அவன் மனம் ஏதோ ஒரு உணர்வால் உந்தப்பட்டு அவனது நடையை வேகப்படுத்தி விரைந்தான். அந்த வேகத்திலும் மருதுவின் பார்வையில் பட்ட தூரத்தே தெரியும் நகர வைத்தியசாலையின் முன்னே ஒரு தோற்றம், எவரும் நட மாட முடியாத இன்றைய சூழலில் இருட்டினில் மனைவி வீதியோரம் நடந்து வருவதை வீதியில் சென்ற வாகன ஒளியில் கண்டு விரைந்தான்.

''என்னணை, நீயும் இஞ்சையோ நிக்கிருய்?''

''பிள்ளைக்கு ரெத்தம் ஏத்தவேணுமாமெல்லோ? அது தான் ஆரத் தெரியும் இஞ்ச. நீங்களும் போற்றியளெண் டல்லோ எங்கிடபோனன்,'' என்ற மனைவியின் பதட்டக் குரலைக் கேட்ட மருது.

"சரி, சரி இப்ப வந்தது நல்லதாப்போச்சு. நான் குடுக்கிறன். பிள்ளை பயப்பிடாத" என விரைந்தவனுக்கு மழலையின் அழுகுரல் மகிழ்வை இரட்டிப்பாக்கியது.

மழைத்தூறலில் நனைந்த மருது மழலையைக் கண்டதும் புதுத் தென்புடன் மகளின் புன்னகை பூக்களைக்கண்டு ரசித்து அந்த மகிழ்வைக்கூற முதலாளி பரமசிவத்திடம் அதிகாலையே புறப்பட்டு அந்த மாடி வீட்டை அடைந்தபோது அவனுக்கு எதிரே நின்ற வாகனம் திகைப்பைக் கொடுத்தது.

அயலவரின் துணையோடு அந்த மாளிகையில் மலாயன் பென்சனியரின் உடலை இறக்கிக் கொண்டிருந்ததைக் கண்டு மயக்கமுற்றவனாய் மௌனியானான்,

இடையே வரும் இருதய நோய் அன்று இரவு அவரது இதயத் துடிப்பையே அடக்கிவிட்டதாம். அந்த முனங்கலுடன ஆஸ்பத்திரி செல்லும் வழியிலும் மருதுவின் பெயரை உச்சரித்தார் என அயலவரின் கூற்றைக் கேட்ட மருதுவோ குழந்தை போன்று கதறி அழுதவண்ணமே இறுதிச் சடங்கில் உரிமை கொண்டான்.

அதிகாலை மரணச்செய்தியில் மலாயன் பென்சனியர் பரமசிவத்தின் பெருமைகள் பறைசாற்றி கனடா, ஜேர்மன், பிரான்ஸ், இத்தாலி, நோர்வே என மக்கள், மருமக்கள், உறவினர் பெயரை உச்சரித்தது.

வெளிநாட்டின் தந்திகளோ மரணச்செய்தி சொல்லி பல தேசம் பறந்தது. அனுதாபச் செய்திகளோடு நாட்டுச் சூழலால் தாங்கள் வரவில்லை என பதில் தந்தி இரத்த உருத்துக்களிடம் இருந்து வந்தடைந்தது. சொந்தம் கொண்டாட உறவினர் இல்லா அயலவருடன் மருதுவும் இணைந்து கொண்டான்.

பேரப்பிள்ளையின் பிறப்பின் மகிழ்வைவிட மலாயன் தோட்ட முதலாளி பரமசிவத்தின் பிரிவு மருதுவுக்குப்

பெரிதும் வாட்டியது. அவனது கோலம்கூட உருத்துள்ள ஓர் உறவினன் போல் தாடியும், தனிமையும், வீட்டிலே முதலாளிக்கு விளக்கு வைத்து அவரது நினைவைப் பூஜித்து அதில் அவனது குடும்பமும் அவனோடு இணைந்துகொண்டு கவலையில் பங்குகொண்டனர். அக்கிராமக் குடிகளும் அவனிடம் சென்று அனுதாபம் தெரிவித்தனர்.

உறவுகள் எல்லாம் உருத்துகள் கூறி உடமைகளுடன், சொத்துக்கள் பிரிக்க சந்திப்பை ஏற்படுத்தினர் அயல் நாட்டில். அதற்கான நாளைக்கூட நினைவுநாள் என்று பெயரும் இட்டனர். விருந்துகள் யாவும் மேல்நாட்டுப் பாணியில். எவரும் இப்போ இலங்கை வர முன்வராததால் சமாதான உடன்படிக்கைபோல் எல்லோர் குரலிலும் ஒற்றுமை ஏற்பட்டது

சமாதான திட்டத்தின் நடுவராக சட்டத்தரணி ஒருவரை நியமித்திருந்தனர். சொத்துக்கள் எல்லாம் பதிவு செய்து பங்கிடும் பொறுப்பு சட்டத்தரணிக்கானது. பரமசிவத்தின் உறவில் உரிமைகள் வலுத்தது. பரம்பரைச் சொத்தெல்லாம் பணமாக மாறின. களைச்சந்தைபோல் கறுப்புப் பணம் உலவியது. கைமாறும் பணங்களும, வெளிநாட்டிலே கொடுத்து சொத்தக்கள் பெயரும் மாற்றப்பட்டது.

உரிமையாளராய் வருபவர் எவரும் உள்நாட்டில் இல்லை. மேற்பார்வைக்கு என புதியவர்களை நியமித்திருந்தனர். எதையும் அறியா மருது குடும்பம் இன்னும் நம்பிக்கையுடனே உழைக்கலானான்.

கைச்செலவுடன் கடிதமும் தந்ததாகப் புதியவர் வந்தார், புதிதாய் வந்தவர் வார்த்தைகள் எல்லாம் மருது மனதில் புயலாய் வீசியது, தந்த கடிதத்தைப பிரித்துப் படித்தான்.

மருது அறிவது!

நாம் இனி அங்கு வர விரும்பாததால் எமது காணிகளையும், சொத்துக்களையும் வேறு ஒருவருக்கு விற்று விட்டோம். ஆதலால் நீ வேறு இடம் பார்த்து உடன் செல்லவும். உனது கணக்குகளைப் பார்த்து இக்கடிதம் கொண்டுவருபவர் தருவார். இனி இவர்கள்தான காணி அலுவல்களையும் பார்ப்பார்கள். அவர்களுக்கு இடத்தை விட்டுக் கொடுக்கவும்,

இப்படிக்கு
முதலாளி பரமசிவத்தின் பிள்ளைகள்.

புயலின் தாக்கத்தால் அணை உடைந்த குளம்போன்று அவனது கண்ணீர் பெருகியது. அறைக்குள் சென்று கமலத்திற்குச் சொல்ல அவளும் சேர்ந்து மௌனம் புழுங்கி வெதும்ப எதனையும் எதிர்பாராதவனாய் அவனது வார்த்தை வலுத்தது.

"ஏ பிள்ள அகத்தி ஆயிரம் காய் காய்ச்சாலும் புறத்தி புறத்திதானே? வெளிக்கிடு பிள்ளை முதலில போவம் புதுக்காட்டிற்கு. எதிலும் இனி இரவலில குந்தாம தணி வளையாய்த்தான் நாம தலை சாய்க்க வேணும். புள்ளையளையும் கூட்டிக் கொண்டு மூட்டை முடிச்சைக் கட்டு பிள்ளை" என்றவன் அந்த மண்ணை விட்டு தன் சுமைகளோடு முதலாளி வீட்டு வழியாகச் சென்றவன் அந்த வீட்டு வாசலில் ஒரு கணம் நின்று பார்த்தான். அங்கு அந்த மாளிகையை இன்று காவல் காக்கவும் ஆளில்லாது தொங்கிய மட்டை, "வாடகைக்கு விடப்படும்" என்ற வசனம் ஏமாற்றத்தையே தந்தது.

இனி ஒருமுறையும் மனதை வாடகைக்கு விடுவதில்லை. எந்த மண்ணானாலும் சொந்த மண்ணாகத்தான் தேடுவோம். இரவல் மண்ணில் உரிமை கொண்டாடும் அந்த ஜீவன்களும் ஒருநாள் எம்மைப்போலதான் சுமையோடு அலைவார்கள்

என்று எண்ணும்போது மருதுவின் மனம் இப்போ தனக்காக அழவில்லை. அவர்களின் வாழ்க்கையை எண்ணிக் கண்ணீர் விட்டான்.

சொத்து, சுகம், பெயர்கள்கூட நிலைக்காதபோது நாம் கொண்ட பாசந்தான் நிலைத்திடுமா? என்று ஏங்கியவனின் கால்களில தோட்டத்து காவல் நாய் வீரய்யா வாலால் தட்டியபோதுதான் உணர்ந்தான். மனிதனுக்கு இல்லாத ஒன்றை வளர்ப்பு நாயில் கண்டு மெய் சிலிர்த்து அந்தக் குடும்பத்தில் ஒன்றாய் அதனையும் கூட்டிக்கொண்டு புதுக்காட்டை நோக்கி மருது குடும்பம் பயணத்தைத் தொடர்ந்தது.

# 8

# உறவில் மலர்ந்த உண்மைகள்

"அத்தான் எழும்புங்கோ, அத்தான் தேநீர் போட்டு மேசையில் வைத்திருக்கிறன். குடித்து விட்டு கஜன் எழும்பிய பின் அவனுக்கும் கொடுங்கோ அத்தான்". என அவசர அவசரமாக தன் கடமைகளை முடித்தபடி குரல் கொடுத்தாள் சாந்தா.

''எத்தனை மணி சாந்தா. நீர் ஏன்... என்னையும் எழுப்பி இருக்கலாமே?''

''இல்லை அத்தான், நீங்கள் நல்ல நித்திரை, குளப்பாமல் செய்வோம் எண்டுதான் சமைத்தும் வைத்துவிட்டேன் நேரமாகிறது வேலைக்கு போயிற்று வாறன். நீங்க தேநீரை குடித்து விட்டு படுங்கோ'' என பரிவான வார்த்தையால் கண்ஜாடை காட்டி புறப்பட்டாள் சாந்தா. அப்போது மணி 6–10 அவள் அவசர அவசரமாக பஸ் நிலையம் நோக்கி நகர்ந்தாள்.

அவன் நித்திரை கலைந்தபோது அவன் மனத்திரையும் கலைந்து கலங்கி கண்ணீரால் நனைந்து, சிந்தனையில் ஆழ்ந்தான். பழைய பல நினைவுகளை இரை மீட்டவனாய் கட்டிலில் சாய்ந்தபடியே சிந்தனை சிறகடித்தது.

சாந்தா ஒரு அரச வைத்தியசாலையில் தாதியாக கடமை புரிகிறாள். பள்ளிவாழ்வில் தொடர்ந்த தொடர்பு குடும்ப வாழ்விலும் மலரும் அன்புப் பெருக்கு, வசதி படைத்த வாழ்க்கை வாழ்ந்த சாந்தா, தன் குடும்ப வாழ்வில் பல இன்னல்களை தாங்கி வாழ்ந்தாலும் குடும்ப மகிழ்வில் குறைவில்லாது வாழ வருவாய்க்கு ஒரு பணியாக தொடர்ந்தாள் தாதி வேலையை.

ஒரே வகுப்பில் பல நண்பர்கள் இணைவார்கள். அந்தத் தொடர்புகளின் துணைதான் இந்த வாழ்க்கை இணைப்பிற்கும் காரணமாக அமைந்தது. இன்றும் அந்த நணபாகள் சொநத ஊரோடு பல துறையில் பணி புரிவதும் பள்ளி வாழ்வின் நினைவுகளை வளர்ப்பதற்கு சாந்தாவின் இல்லம் ஓர் சந்திப்பு மையமாகவும் அமைந்தது.

சாந்தாவின் கணவர் பாஸ்கர்... பார்வைக்கு ஆணழகன் தான். அவனது துடுக்குத்தனம் தூய்மையான உள்ளம் எல்லோர் மனதையும் எளிதில கவரும் வதனம், சாந்தாவை ஈர்த்ததில் வியப்பில்லை. அவனது அழகை ரசிக்க அதிக காலம் சாந்தாவிற்குக் கொடுத்து வைக்கவில்லை. காரணம் வீதி விபத்தில் தன் காலை இழந்து பொய்க்கால் பூட்டி அதிக தூரம் பயணம் செய்யமுடியாத நிலை. சொந்த தொழில் இல்லாததால் வீட்டோடு வருவாய்க்கு சிறுகடை போட்டு அதில் இருந்தே பலரது துணையோடு வியாபாரம் நடத்துவான்.

சாந்தா இதனை பெரிதுபடுத்திக் காட்டாதபோதும் அவன் மனம் தன் நிலை எண்ணி அவள் மகிழ்வு குறையுமோ என்ற ஐயத்தால் கவலை கொள்வான். அவன் வாழ்வில் நண்பர் தொடர்பும், குடும்ப மகிழ்வும், வரவுக்கேற்ப செலவும, திட்டமிடல் முழுப் பொறுபபும் சாந்தாவே கவனிப்பாள்.

மாலைவேளை நண்பர்கள் கூடும் நேரம்; ஊர்புதினங்களுடன் பல நினைவுகளையும் நண்பரோடு பரிமாறிக் கொண்டு இருந்த

போது, சாந்தாவின் குரல்கேட்டு முன்கதவைத் திறந்தான் பாஸ்கர். என்றுமில்லா மகிழ்வுடன் இருந்த அவள் வதனத்தைக் கண்டு 'என்ன சாந்தா இன்று புதிய பொலிவுடன்' என புதிர் விட்டான் பாஸ்கர்.

''புதுச் செய்திதான் அத்தான், எதிர் பார்க்கவே இல்லை இதனை அறிந்தால் நீங்களும் மகிழ்வீர்கள்.''

''என்ன .. என்ன சொல்லு மன் அறிவோம்'' பாஸ்கரின் அன்புக் குழையல் ஆர்வத்தை ஊட்ட எல்லோர் பார்வையும் சாந்தாவின் வார்த்தையை எதிர்பார்த்து நின்றூர்கள்.

''அத்தான் உங்கள் ஆவலை சோதிக்கவில்லை. ஆனுல் நல்ல செய்தி சொன்னுல் எனக்கு உங்கள் பரிசைத் தரவேண்டும் என்ன தருவீர்கள்?''

''ஓ... அதுவா, நண்பர்களை கேட்பது போல் இப்போ நாம் என்ன தருவது?''

''ஐஸ்கிறீம்'' வேண்டித் தந்தால் எல்லோருக்கும் சொல்லுவேன்.''

''டே, பாஸ்கர் உன் மனைவி எங்கிட்டே படிச்சு எங்கிட்டே விடுறு பாத்தியா?''

''சரி, சரி சாந்தா சொல்லும் வேண்டித்தாறம்'' சாந்தனின் குரல் அவளது புதிரை அறிவதில் ஆர்வம் கொண்டது.

சாந்தா தன் மௌனத்தை கலைத்தவளாய் கூறிஞள் ''எங்களோடு படித்த முரளி இப்போ எங்க ஆஸ்பத்திரியிலே டாக்டராக வந்திட்டான். அவனைக் கண்டதும் முரளி என்றேன் அத்தான். அவனும்...''

''என்ன கூறிஞன் சாந்தா?''

''என்ன கூறுவான் அவன் தான் இப்ப பெரிய டாக்டராச்சே. இப்ப தெரியுமா எங்களை' என சாந்தன் குத்தலாக கூறினை.

''ஆ... அப்படியா சாந்தா? அப்படியா?''

''எப்படி அத்தான் கூறுவாண். பள்ளி வாழ்க்கையில் சந்தித்தது போன்றுதான். இன்று மாலையே வீட்டிற்கு வருவதாகக் கூறினன் முரளி'' என்றுள் சாந்தா.

''என்ன இருந்தாலும் அவன் இப்போ டாக்டர் முரளி தானே சாந்தா?''

''ஓம் அத்தான். இது எமக்கு எவ்வளவு மகிழ்வையும் பெருமையையும் தருகிறது'' என்றுள் சாந்தா.

''அப்படியானல் அவன் கௌரவத்தையும் மதிப்பையும் நாமும் காத்துக் கொள்ள மற்றவர்களும் அவனை கௌரவமாக மதிக்கும் வகையில் அவனோடு நடந்து கொள்ள முயற்சிக்கவேணும் இல்லையா சாந்தா.''

''ஆம் அத்தான் இன்று கதைத்ததை சிலர் பார்த்து திகைத்ததில் இருந்து கண்டேன். இனி மரியாதையாகப் பேசுகிறேன் அத்தான்''

''அப்படி ஒன்றும் வேண்டியது இல்லை அப்படிப் பழகினல் இங்கு வருவதிலும் கௌரவம் குறைந்து விடும் என்பீர்களோ? அபபடித்தானே என்ன?'' என எதிர்பாரா விருந்தாளியாய் எல்லோரையும் நினைப்பில் ஆழ்த்துவது போல் அங்கே வந்து பேச்சிற் கலந்து கொண்டான டாக்டர் முரளி.

''ஓ... முரளி, டாக்டர் முரளி எப்ப வந்தீர்கள்'' மதிப்பும் கிண்டலும் கலந்த குரல் சாந்தனின் பேச்சில் தென்பட்டது

''ஓ... சாந்தனு எதிர்பார்க்கவே இல்லை. அப்போ பழைய படி பள்ளி வாழ்க்கை போன்ற சூழல்தான்'' என டாக்டர் முரளி கூறினர்.

''அப்படி ஒன்றும் போட்டி இராது காரணம் இங்கு உதைபந்தாட்டம் நடைபெறுதே'' எனப் பள்ளி வாழ்வில் நிகழும் உதைபந்தாட்டப் போட்டி நினைவுகளை மனத்திரையில் பதிய வைததான் பாஸ்கர். இருவரும் எதிர் அணியாய் இருந்து விளையாடுவதால் அதில் ஏற்படும் வெற்றி தோல்வியும் படிப்பில் இன்று முன்னுக்கு வந்ததுபோல் அன்றும் இருவரிடமும் இருந்த போட்டி நினைவுகளையும் சாந்தன் நினைதது மனம் குளமந்தான்.

சற்று நேரத்தில் தேநீர் தயாரித்து பரிமாற வந்தாள் சாந்தா.

''முரளி, இன்று உன் வருகை எல்லோருக்கும் பெரும் மகிழ்வுதான். சாந்தாவுக்கு இரட்டிப்பாய் இருக்கிறது பார்த்தாயா?'' என்றான் பாஸ்கர்.

''ஓம் ஓம் எனக்கு ஐஸ்கிரீம் கிடைக்கும் அல்லவா'' என்றாள் சாந்தா.

தொடர்ந்தன நட்பின் தொடர்புகள். பல கதைகள் பரிமாறபபட்டன. பாஸ்கரின் நிலைபற்றி விபரித்து தம் திருமணத்துக்குப் பல விதத்தில் முரளி காட்டிய தீவிரத்தையும் அதன் பலன்தான் கஜன் என்று மகிழ்வோடு கூற, அக்கறையோடு கேட்டான் முரளி.

''டாக்டர் முரளி இனி எப்போ வருவது? வீட்டில் ஒரு முறை விருந்துக்கு வரவேண்டும,'' என பாஸ்கர் அழைபபு விடுத்தபோது.

''நிச்சயம் வருவேன். உங்கள் வீட்டில் தொடர்ந்து சாப்பிடக் கிடைக்காதா? ஒரு முறையுடன் நிறுத்தி விடுவீர்களா?'' என்று தமாஷுடன் ''சற்று வேலைபட முக்கள் உண்டு குறைந்ததும் ஆறுதலாக வருகிறேன்'' எனக் கூறி நண்பர்களிடமிருந்து விடைபெற்ருன் முரளி.

சாந்தனின் மனதில் ஏதோ இனம் புரியாத கவலை. என்றும இல்லாத சோர்வுடன் சிந்தித்தான். ''என்ன சாந்தன் மௌனியாகி விட்டாய்'' என பாஸ்கரின் குரல்கேட்டு

''ஒன்றுமில்லை பாஸ்கர், இவன் முரளி முன்பு போல் தானு இப்போ அல்லது மாறிவிட்டானு?'' என அவன் கவனத்தைத் திசை திருப்பினுன்.

''சிறுவயசில் பள்ளி வாழ்க்கை வேறு, இப்போ பொறுப்புள்ள பதவி. அத்தோடு சிறு வயதில் செய்வதை தொடர்வதில்லை. அதனை எண்ணும்போது கூடசிரிப்பாய் இருக்கும். ஏன் நாம்கூட முன்பு உள்ள நிலையிலா இருக்கிறேம் இப்போ எத்தனை பேருக்குப் புத்தி கூறுகிறேம் எத்தனை மாற்றங்கள் எம் வாழ்வில் பார்த்தாயா?''

''ஏன் எமது தொடர்புகள் தொடர்கிறதே பாஸ்கர்',

''தொடர்கின்றது நட்பு. ஆனுல் நடைமுறை செயல் பேச்சுக்கள் மாறுகின்றதை அறிகின்றேம். அதுதான் மாற்றம்.''

''என்ன வேதாந்தம் பேசுகிறீர்கள். வாங்கோ சாப்பிட்டிட்டு கதைக்கலாம்'' என உணவைச் சாந்தாபரிமாறிய பின் சாந்தன் வீடு சென்ருன்.

காலச் சக்கரம் சுழன்றேட நண்பர்களும் பள்ளி வாழ்க்கை போன்று தினம் சந்தித்து மகிழ்வதில் டாக்டர் முரளியும் இணைந்து கொண்டான்.

பாஸ்கர் சற்று சுகவீனமாக தன் கால் வருத்தம் முன்பு முறிந்த இடத்தில் கொதிவலியால் இரவு முழுவதும் துவண்டு

காலை சற்று அயர்ந்து தூக்கும் போது குமட்டலோடு மசக்கை ஏற்பட்டு சத்தி எடுக்கும் சத்தம் கேட்டு எழுந்தான். சாந்தா தான் வேலைக்கு நேரமாகியும் புறப்படாது அவளும் தாய்மைப்பேற்றை அடைந்த அறிகுறியை உணர்த்தினள்.

தன் மகன் கஜனுக்கு ஓர் துணை எதிர்காலதில் தேவை தான் ஆனல்... ஆனல்... வளர்த்தெடுப்பது, வாழ்க்கைச் செலவைச் சமாளிப்பது, எல்லாவற்றிற்கும் அவள் ஒரு சுமை தாங்கி ஆகிவிடுவாளோ என்ற கவலையும் கலந்திருந்தது அவனது நினைவில். சாந்தாவோ நடந்தவற்றை பாஸ்கரிடம் கூறுது அவசர அவசரமாக புறப்பட்டாள்.

''சாந்தா! சாந்தா! இன்று லீவு போட்டு நின்றால் என்ன?'' என்றான் பாஸ்கர்.

''இன்று அதிக வேலையுண்டு. திடீர் என நிற்க முடியாது. போய் அரை நாள் லீவு போட்டு வருகிறேன். உங்களையும் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்ல வேண்டும் அல்லவா, முடிந்தால் முரளியை வந்து பார்த்துச் செல்ல சொல்கிறேன் அத்தான்'' என்று கூறிக்கொண்டே விடை பெற்றாள் சாந்தா.

சாந்தன் காலை 10 மணிபோல் வீட்டுக்கு வந்தபோது தனது நிலைகளோடு சாந்தாவின் நல்ல செயதியைக் கூறுவதில் மகிழ்வுற்றான். ''இந்த நிலையில் பாஸ்கர் எதிலும் கவனம் தேவை. பாஸ்கர் உன் உடல் நலக்குறைவு ஒரு சிலருக்கு சாதகமாக அமையக் கூடாது அதுதான்...''

''என்ன சாந்தன் என் உடல் நலத்தில் மற்றவருக்கு என்ன இருக்கிறது. வீட்டில்தான் அதிக தாக்கம் ஏற்படுமோ'' என்றான் பாஸ்கர்.

''என்ன பெரிய விவாதம். சுகயீனம் என்றால் சற்று ஓய்வு எடுத்து இருப்பதைவிட துள்ளித்திரிய பார்க்கிறீரே,

பாஸ்கர். ஏன் சாந்தன் நீ கூட கூறக்கூடாதா?'' என்ற வார்த்தையைக் கேட்டு திரும்புகையில் டாக்டர் முரளி வைத்தியத்திற்கு தயாராக நின்றார்.

''நீ அல்லவா நண்பன். நிலை அறிந்து பணி செய்யும் உன் சேவை எம் வீட்டுக்குத் தேவை'' என தமாசாக வரவேற்கிறான் பாஸ்கர்.

''இல்லை. இன்று சாந்தா கூறுவிட்டால் நான் எப்படி வருவது நீ கூட சொல்லிவிடவில்லையே. அவளாகத்தான் கூறினாள். நான் கூட அவசரமாகச் செல்ல வேண்டும்.'' என பரீட்சித்துவிட்டு ''இதற்கான மருந்தை உடன் தந்துவிடுகிறேன். பின்னர் மாலையில் குளிசைகளை சாந்தாவிடம் கொடுத்தனுப்புகிறேன். சாந்தன் சற்று தாமதித்து வந்தால் தருகிறேன்'' என்றான.

சாந்தனும் ஆமா போட்டு ஏற்றுக்கொள்ளவும் டாக்டர் முரளி விடை பெற்றுச் சென்றார்.

டாக்டரின் தொடர்பும் பாஸ்கரின் மகிழ்வையும் ஜீரணிக்க முடியாது திண்டாடினான் சாந்தன். பெண்களிடம் ஏற்படும் போட்டிகள் போன்று நண்பர்களின் உறவைச் சாந்தனால் பொறுக்க முடியவில்லை. இது அவனது மனதில் ஓர் விதத் தாக்கந்தான். பள்ளி வாழ்வில் போட்டி, விளையாட்டுத் துறையில போட்டி, இன்று தம் நண்பர் தொடர்பில் முரளி செல்வாக்கு ஓங்குவதை எண்ணும்போது சாந்தனது தாழ்வு மனம் தத்தளிப்பது அவனது உளத்தாக்கமே காரணம்.

சாந்தன் பாஸ்கரிடம் விடைபெற்று புறப்பட்டான் வைத்தியசாலையை நோக்கி.

டாக்டர் முரளியின் அறையில் அங்கே பல நோயாகள் காத்திருக்க காவலாளியிடம் தன் வரவை தெரிவிக்க அவனும்

உள்ளே அழைத்தான். அங்கே தெரிந்த குரல் ஒன்றும் டாக்டரும் ஏதோ முக்கிய விடயமாகக் கதைப்பதை அறிந்து காவலாளி அருகே நிற்க கூறினான். அங்கிருந்து வந்த குர லுக்கு செவிமடுத்தான் சாந்தன்.

''எப்படியும் குழந்தையை அழித்தே ஆகவேண்டும் முரளி. இனிக் குழந்தை பிறக்காது ஒப்பிரேசன் செய்தாலும் நல்லது'' என்றாள.

''எதனையும் நன்று யோசித்து முடிவைச் சொல்லு சாந்தா'' என்றார் டாக்டர் முரளி,

மருந்தை வாங்கச் சென்ற சாந்தன் விஷத்தை வாங்கி வந்தவனைபோல் நடந்தவற்றை இட்டிப்பாகக் கூறி சென்ற விடயத்தைக் கூறாது வேறு விடயத்துடன் திரும்பி வந்ததை எண்ணி ஆத்திரபபட்டான் பாஸ்கர்.

காரணம் அவன் உடல்நிலை நெருப்பாக கொதித்து வார்த்தைகள் தடுமாறும் கடும் ஜுரம் அவனை வாட்டியது;

''சாந்தன் நீ மருந்து வேண்டிவந்தாயா?''

''இல்லை இந்நிலையில் எப்படிக் கேட்பது என்றுதான் ஓடி வந்தேன பாஸ்கர்'' என்றான் சாந்தன்.

''ஜுரம் தாங்க முடியவில்லை எனக்கு, உடன் வைத்திய சாலை செல்ல வழி செய்வாயா? அல்லது அங்கும் போய்...'' எனக் கூறவே,

''இல்லை பாஸ்கர் உடன் செல்வோம்'' என ஓட்டோவை அழைத்து வைத்தியசாலை வாசலை அடைந்தான். அஙகே கண்ட காட்சி திடுக்கிட வைததது சாந்தனுக்கு, என்ன திகைப்பு, சகலதையும் பார்தத பாஸ்கர் அமைதியாக இருந்தான்.

டாக்டர் முரளியின் அணைப்பில் சாந்தாவின் கண்ணீர் சிதறி சிந்தி நனைநதன.

''என்ன முரளி என்ன நடந்தது?'' சாந்தனின் குரலில் கர்ச்சிப்பும சந்தேகமும் கலந்து இருந்தது.

டாக்டர் முரளி அமைதியாக அடக்கத்தோடு கூறினன். ''சாந்தா தாயாகிவிட்டதால் தலைச்சுற்று ஏற்படடது, அவ்வளவு தான். அதிக யோசனையும் இதற்கு ஒரு காரணம்''

''ஏன் டாக்டர் இபபோ எப்படி இருக்கு?''

பாஸ்கரின் குரலில் அவனது ஜூரம் அதிகரித்தது புரிந்து அவனை அணைத்தபடி ''பாஸ்கர் அவள் உன் சுமைகளையும் தன் தாய்மையையும் அதிகம் எண்ணிச் சிந்தித்தாள். கருச் சிதைவை ஏற்படுத்த என்னிடம் ஆலோசனை கேட்டாள். எனக்குத் தெரியும் உன் ஆவல்கள். அத்தோடு இருவரும் இணைந்து தாம்பத்திய உறவால் தவிர்ப்பதை விடுத்து சிதைவு கள், தடைகள் கூட ஒருவகை கொலையே என விபரித்தேன். அததோடு உணவு நேரத்தக்கு இல்லாத பெலவீனம் தான் உன் சாநதாவின் இந் நிலைக்குக் காரணம். இபபோ நானே வீட்டிற்கு கூட்டிவர எண்ணினேன், நீயே வந்துவிட்டாய்'' என்ருன் முரளி

அப்போது சாந்தனிடம் ''சாந்தன் சில தொழில்களில் புனிதம் உண்டு. இதனை உணராத உன்னைப்போல் சிலர் எண்ணததில் எழும் சிந்தனைகளை மற்றவர்களிடத்திலும் திணிக்க வார்த்தைகளை அளப்பது கூட ஒருவகை உளத் தாக்கமே.

குரு, டாக்டர், ஆசிரியர்களிடத்தே உள்ள புனிதத் தன்மைகளை புரியாது அவர்கள் சேவைக்கு களங்கம் கற்பிக்க நினைபபதால் வீணன விபரீதங்கள் வளர்ந்து சேவைக்கு ஆள் இல்லாத நிலை உருவாகிவிடும். ஏன் அவர்களும் அப் புனி

தத்தை காப்பாற்ற முடியாவிடில் அதனுல் ஏற்படும் களங் கத்தை எவராலும் தவிர்க்க முடியாது. அப்படிப்பட்ட ஒரு சிலர் இருந்தாலே புனிதம் கெட்டுவிடும். இவர்கள் இருப் பதை விட இறப்பது நல்லது சாந்தன்.

ஆனுல் கற்புள்ள எந்தப் பெண்ணும் இவர்களிடம் மனம் திறந்து பேசி தம் இன்னல்களைத் தீர்க்க வேண்டும். அந்த நிலையைத் தாங்கும் பணிபபாளர்களைச் சநதேகப்படவோ, சந்தேகப்படும்படி நடப்பதோ மனித குலத்துக்கே பெரும் இழுக்காகிவிடும்.

முதலில் நட்பின் மகிமை புரியாதவர்களை நண்பர்கள் என தொடர்புகளைத் தொடராமல் பார்க்கவேண்டும். தொடர்புகள் தொந்தரவுக்கல்ல. கணவன் மனைவி உறவிலும் களங்கம் ஏற்படுத்தவும் நடபின் மகிமை புரியாது குடும்பத் தில் குளப்பத்தை ஏற்படுத்தவும் உன் போனற உறவுகள் உபத்திரவத்தைத தராது இருக்க எனது நம்பிக்கை வாழ்வு தான் என்னைக் காபபாற்றியது'' எனக் கூறியபோது அருகே டாக்டர் முரளி மருந்தோடும் மனைவி சாந்தா புது நினைவு களோடும் விழித்துப் பார்த்தார்கள். அடபோது அங்கே மௌனங்கள் பேசின.

9

# திருப்பம்

"இந்த முறை ஷண்ணின் பேர்த்டேதாண்டா நல்லா என்ஜோய் பண்ணனும் மச்சான்"

''ஏன் மச்சான் அப்பிடிச் சொல்லுறாய் அடுத்தவாரம் பாரன்ரா நம்மிட கமலே. எப்பிடிக் கொண்டாடுறன் எண்டு''.

''டேய் பாபு! நீ வருசத்துலே ஒருசகா நடக்கியதை பெரிசாய் சொல்லுறாய். மோகனர அறையில் தினமும் இதே பாடடிதானரா''.

நண்பர்கள் பேச்சும் எதிர்பார்ப்பும் மூர்த்திக்கு ஏற வில்லே. காரணம் அவன இவ்வாரம் தான தனது தாய் நாடான இலங்கைக்குச் சென்று தாய் உறவையே இழந்து வந்தவன். ''மூர்த்தி இப்பிடி எத்தினை நாளா இருபபது? முன்பு எதுக்கும் நீதானே முன் நிற்பாய். வன்ரா முடிஞ் சதை நினைச்சு கலங்கிக் கொண்டு ...... வா, மச்சான் இதில ஒரு டோஸ் எடுததுப் பாரன். இதென்ன உனக்கு சொல்லியா தரவேணும்'' என்றுன் பாபு.

மூர்த்திக்கு இது புதிதில்லேதான். ஆனால் அவன் மன தில் இன்னும் அந்தப் பிரிவுத் துயர் மாறாதது அவன் நேரில் கண்ட அனுபவம்தான் காரணமாய் இருந்தது.

அந்த பயணத்துக்குக் காரணமான அந்தக் கடிதம் அவன் மேசையில் இருந்து பல நினைவுகளை ஞாபகமூட்டி மனதை அழுத்தியது. அந்தக் கடிதத்தை மீண்டும் படித்தான்.

அன்புள்ள தம்பி மூர்த்தி!

நாட்டு நிலைமையால் எல்லோரும் வேறு இடங்களுக்குச் சென்று விட்டனர். எவ்வித போக்கு வரத்தும இல்லாத நிலையில் அம்மா வேறு இடங்களுக்கும் சென்று தங்க மனமில்லாது வீட்டில் தான் இருப்பதை விரும்புகிறு. நாம் கூட எங்கு செல்வது? எத்தனை நாட்கள் தங்குவது? நெருக்கடிகளை தாங்க முடியாது அம்மாவுக்கு அடிக்கடி உடல் நலக் குறைவும் ஏறபடுகிறது. இங்கு மருத்துவ வசதி இல்லாத நிலையில் பெரும் சிரமப்படுகின்ருேம். இதனுல் எனது படிப்பையும் நிறுத்தி வீட்டில் இருக்கிறேன். அபபா இருந்தால் நீ இவ்வளவு சுமைகளும் சுமக்க வேண்டி இராது இருந்தும் அமமா உன்னைக் காண ஆவலாய் இருக்கின்ரு. நீ பணம் அனுபபா விடினும் அம்மாவின் ஆவலை உன வாவால் பூர்ததி செய்தால், அதுவே அம்மாவுக்கும் ஆறுதலாய் இருக்கும். எதற்கும் உன் வரவை எதிர்பார்க்கிருேம்

இப்படிக்கு
அன்பின் புவனுக்கா

அத்தி பூத்தாற் போல் வரும் கடிதம். அதில் பணம், பணம். கடன், கடன் எனத்தான் இருக்குமென எதிர்பார்த்தவனுக்கு உடன்பிறப்பின் உணர்வுக் கடிதம் மனதை உறுத்தியது.

அகதியாய்ப் புகுந்த நாட்டில் இருந்து புறப்பட்டவனது பயணம் அவனது நாட்டு மண்ணில் காலடி படும்வரை அவனது மனமும பலவித எண்ணத்தில் மிதந்து வந்தன.

வீடு செல்ல இன்னும் ஆறு மைல்கள் செல்ல வேண்டும் ஆனால் இறங்கிய இடமுமோ சேறும் சுரியும் சேர்ந்து நகர கொட்டகையுடன் காட்சி தரும் அந்த சந்தி பல விளம்பரங் கள் ஒட்டி ஒட்டியே தடித்து விட்ட சுமைதாங்கி கட்டை யும், கரியுருவத்துடன் இருட்டறையில் நிற்பவரின் தோற்றம் தான்.

முதலாளி என அழைக்கும் அந்தப் பழைய அப்புக்குட்டி தேநீர்க்கடையும், பெட்டிக்கடை ஒன்றும் சேர்த்துத்தான் பஸ் நிலையம் எனக் கூறும் நகரப் பகுதி இது பார்வைக்கு ஐந்து வருடத்தின் பின்பும அதே காட்சிப் பொருளாக எதுவித மாற்றத்தையும் காணாத சூழலை காத்து வரும் பாங்கே தனி என மனதில் பட்டது.

இவ்விடம் கசிப்பு மன்னர்கள் சந்திக்கும் சத்திரமாக முன்னேற்றமடைகிறது. ஜன நடமாட்டத்திற்கு இவையும் ஓர் காரணம் போலும். காட்டாறு போன்று மணல்கள் குவிந்து புதைந்து செல்லும் உழவு இயந்திரப் பாதைகள் தான் பிர தான வீதிகளாக இன்றும் காட்சி தருகின்றது. இதனிடையே சப்பாத்தும், தொப்பியும், சூட்கேசும் அதில் உள்ள நாலு சில்லும் என்ன பாக்கியம் செய்ததோ? அதைச் சேர்த்துத் தூக்குவதற்கு யாரையாவது துணைக்குக் கூப்பிட சுற்றும் முற்றும் பார்த்தபோது ......

"தாரு ... தாரு தம்பி ...... மூர்த்தியா ......? என்ன மாற்றம், பொடிப் பயலாய் திரிஞ்ச நீ இப்ப என்ன தடிப் பயலாய் வந்திருக்கிறாய்."

வீட்டுப் பக்கம் போக ஏதும் வருமா முத்தண்ணே?"

"இது என்ன கதை தம்பி. எங்க பகுதிக்கு என்ன ஓடப்போகுது? இனி மழை காலம் தோணி தான் ஓடவேணும் இந்த வெள்ளத்தில."

''அப்ப வாறியளே முத்தண்ணை ......''

''தம்பி ஒருக்கா அப்புக்குட்டி கடைப் பக்கம் போயிற்று ஓடி வாறன். கொஞ்சம் ......''

''சரி சரி என பத்து ரூபாவை எடுத்து விட்டான். வாயைச் சுழித்து துபல் துபபி விட்டு சால்வையைத் தலையில் கட்டி, போயிலையை எடுத்து வாயில் போட்டுக்கொண்டு வந்த வேகம் ஒரு தனிதான். இளமை திரும்பி விட்டதோ என எண்ணும் அளவிற்கு அந்த வெடில் மணத்தில் எழும் உசாரில் தலையில் பெட்டியை ஏற்றிவிட்டார் ஒருவாறு.

''இப்ப இந்தப் பாதையில வண்டிலும் போகாதே முத்தண்ணை.''

''தம்பி கணபதியின்ர வண்டி வரும் ஆனல் சுணங்கும் தம்பி அதுக்கிடையில நடந்திடலாம்'' என கூறியவாறே நடையைத் தொடர்ந்தனர்.

அந்த பிரான்ஸ் நாட்டில அரை மைல் தூரமானாலும் எத்தனை வசதி வாய்ப்புக்கள். இப்போ அதை நினைக்க, சப்பாத்துக் கூட கதைக்கத் தொடங்கியது எது எப்படியிருந்தாலும் ஆறு மைல் நடக்கத்தானே வேண்டும் என எண்ணும் போது சொந்தக் கார் இருந்தாலென்ன அங்கு சொந்த வீடு வேண்டினால் என்ன எல்லாம் அந்த நாட்டுக்குத்தானே சொந்தம். பேருக்கு இருந்தாலும் ஊருக்கு வருமா? என்று எண்ணுகையில ஏக்கப பெருமூச்சாகத்தான் இருந்தது.

முத்தண்ணையின குரல் அவன் சிந்தனையைக்கலைத்தது,

''தம்பி ராசனும் உங்கட ஊரிலதான் இருந்தவனே?''

''தாரண்ணே அது?''

''அதுதான் தம்பி உடையாற்ற மகன் ராசன்!

''இல்லையண்ணே! அவன் அவுஸ்ரேலியாவில் எல்லோ இருக்கிறான்''.

''என்ன தம்பி தெரியாதோ விஷயம். அந்தப் பெடி செத்து பத்து நாளாச்செல்லோ?''

''என்னண்ணை என்ன நடந்தது?''

''அங்கை கார் அடிச்சு பத்து நாளாம், உடையார் வீட்டில் ஒரே செத்தவீட்டுச் சனமா இருக்கு. மையம் நாளைக்கு வருகுது எண்டு கொழும்புக்கெல்லோ உடையார் போயிற்றார். இஞ்சதான் வருகுது சவம்''.

''இந்த நாளையிலே இஞ்ச ஏனண்ணை இதெல்லாம்.''

''தம்பி அறுபத்தைஞ்சு முடிஞ்சுதாம் செலவு. அந்த மனுசன் விடுமே பின்னை? என்ன முடிஞ்சாலும் ஊருக்கதான் எண்டு நிக்குதுகள் பெண்டுகளும்''.

மூன்றும் மைல் கல்லை தாண்டியபோது ஒரு குற்றியில் இருந்து தான் போவமே என எண்ணியவனாய் ''முத்தண்ணை இதில ஒருக்கா ஆறிப் போனா என்ன ......?''

''ஓம் தம்பி ஓம் ...... இதில சுருட்டுப் பத்திட்டுப் போவம்'' என அந்தப் பாலை மரத்து நிழலில் ஒதுங்கி நின்றான்.

வண்டில் சத்தம் சந்தைச் சனங்கள் வருவதைக் கண்ட முத்தண்ணை ''தம்பிக்கு அதிஷ்டம் பாரு. கணபதி வண்டி வருகுது'' என ஆயத்தப்படுத்தினார்.

வண்டியை முந்தி சைக்கிளில் வந்தவன், மூர்த்தியைக் கண்டதும் நின்றவன்.

''என்ன மூர்த்தி அண்ணே, என்ன திடீரெண்டு, வீட்ட தெரியுமே?''

''அட செல்வமா இப்படி வளர்ந்திட்டாய்?''

''வா அண்ணே வா. இதில போவம்''.

''தம்பி போங்கோ, நான் வண்டில்ல வாறன் சாமான் களோட ... '' என வண்டி நெருங்கியதுடன் பயணம் தொடர்ந்தது.

''செல்வம்... என்ன இப்பவும் நீ அந்த கராச்சிலதானே!''

''இல்லையண்ணை தனியாப் போட்டிருக்கிறன். ரவுணில, இரண்டு பேர் வேலை செய்யினம். அதுதான் அவையளைப் பார்க்கச் சொல்லிற்று வாறன் ......''

''நீயும் உழைத்து இன்னும் இரண்டு குடும்பம் உலை வைக்க வழி செய்திட்டாய். அது பெரிய காரியம் பாரு......''

''என்ன இருந்தாலும் உங்க சம்பாத்தியம் பெரிசுதானே அண்ணே.''

''பணத்தை உழைச்சென்ன செல்வம், அந்நிய வாசம் எல்லோ எங்களுக்கு. நீ ஊர் உறவோட வாழுற மாதிரி ஆகுமே.'' என தன் மனவிரக்தியைக் கொட்டித் தீர்த்தான் மூர்த்தி.

வீட்டை நெருங்குகையில் எத்தனையோ எதிர்பார்ப்பு, எத்தனையோ மாற்றங்கள் என ஏங்கியவனுக்கு அதே கொட்டிலும் மாடும கன்றும், முற்றத்தில் நாயுமகுலைத்தது.

''அம்மா, அம்மா ...... இஞ்ச பாரன் ..... மூர்த்தி வந்திட்டான் ......'' தங்கையின் குரல்தான். ஓடிவந்து கட்டிப்பிடித்து அம்மாவிடம் இழுத்துக் கொண்டு சென்ருள். எழும்ப முயன்ற அம்மாவின் பாயிலே அவனும் இருக்க முயனறவனுக்கு அம்மாவின் முத்தமழை கண்ணீர்த் துளிகளால் நனைந்து விட்டது. அம்மாவின் உடம்பில் பல மாறுதல்கள். உற்சாகம், பூரிப்பு மெல்ல எழும்பிக் குசினிக்குள் செல்கிருள்.

''எனடி புள்ளை! கோப்பியா போட்டனீ. முட்டையை அடியாதையன்......''

''என்னணை அம்மா இண்டைக்கு குசினிக்குள்ள வந்திட்டாய்?''

''விடு, விடு ...... நான் சமைக்கிறன். நீ ஒருக்கா அந்தக் கோழியை உரிச்சு வெட்டித்தா புள்ளை ......''

தம்பி தங்கையின் துள்ளல் குதிப்புகளும் அவனது களைப்பைக் கலைத்தது. உடன்பிறப்புகளின் உறவையும், பழைய நினைவுகளை உறுத்தியது. வாசலில் முத்தண்ணனின் குரல் கேட்டு பெட்டிகளை இறக்கி, சிகரெற் பக்கற்றும், நூறு ரூபா காசையும் முத்தண்ணையின் கையில் புதைத்த போது, ''என்ன இருந்தாலும் நீ பெரியவன்தான் தம்பி ......'' என அவரது காவிப் பற்கள் யாவும் ஒருமுறை வெளியுலகை பார்த்தது போல் சிரித்து விட்டு மீண்டும் ஒருமுறை அப்புக்குட்டி கடைக்குச் செல்லத் தூண்டியது அவனது கால்கள்.

''முத்தண்ணை இஞ்ச சனக்க வேலையிருக்கு நில்லன்...''

''தாரு அம்மாவா, எட நேற்றும் மனுசி சொல்லிச்சே வருத்தம் கூடியிருக்கெண்டு இப்ப இப்பிடி நிக்கிறியே என்ன இருந்தாலும் வெளிநாட்டு மகனைக் கண்டா சும்மா இருக்குமோ பின்ன?''

''முதது. வா... இந்தக்கோழியைஉரிச்சி டுப் போவன்...''
தினம் தினம் திண்டாலும் அருமையாய்த் தரும்போது அவர்க ளுக்கும் மகிழ்வுதான். இதுவென்ன, நம் நாட்டில வெள்ளைக் காரர் வந்தால் கூட நாம் அவங்கட நூடில்சை ஆக்கிக் கொடுத்து ஏதோ புதிசா கொடுக்கிறோமெண்டு மகிழிறகில்லையா. அது போல் தான கோழிகள் சமையல்கள் தினமும் தொடரும். பணங்கள்ளும். எண்ணெய் முழுக்கும், பணப்புழக்கமும், வீட் டில் பல முன்னேற்ற திருத்தங்களும் தொடர்கிறது. திருமணப் பேச்சுகளும் அடிபடுகிறது. முததண்ணை இப்போ நிரந்தர ஊழியராகி விட்டார்.

உடையார் வீட்டில் மேளம் உரத்துக் கேட்டது.

''பதினைஞ்சு நாளாம். சமயம் வந்திட்டு உடன் எடுப் பினமாம் உருத்துக்காறரோட, ஊரே சூழ்ந்திட்டு சுடலையில. உடையார் தம் பெருமையினைச் சொல்ல அவுஸ்திரேலியா எண்டாலும் எடுக்துப் போட்டார் பாரன்......'' என்ற முத் தண்ணையின் கூற்றுக்குத் தலை அசைத்தான் மூர்த்தி.

இதைக் கேக்கத்தானே உடையார் அறுபத்தையாயிரம் செலவழித்தார். அழுது, அழுது அலுததுவிட்ட வீடு அமர்க் களப்படுகிறது. உடன் சோற்றுடன் உறவுகள் கலநதன இவையெல்லாம் மூர்த்திக்கு ஓர் கனவுபோல் இருநதது.

அம்மாவும் வருத்தமாய் அடிக்கடி இருப்பதால் அவனது பயணமும் முடிவாகவில்லை. வருத்தம் பார்க்க வருபவரெல் லாம் வரனைப பார்க்கவும் வரததான் செய்தனர்.

''தம்பி மூர்த்தி ..... நான் இருக்கேக்க உனக்கும் ஒரு கட்டுபோட்டு கரை சேத்தா நிம்மதியா போயிருவன்......''

''இப்பகட்டும் வேணும் கரையும் வேணும் ஒழுங்கா உடம்பைப பாரமமா நாளைக்கு ரவுணுக்குப் போய் உன்ர வருத்தத்துக்கு மருந்தெடுப்பம் ...''

''இவன் இதுச்குத்தானுக்கும் வந்தவன் என்ர வருத்நம எனக் குத் தெரியும்· முதலில நீ உனரை மூடிவைச் சொல்லு தம்பி... ...''

''இதொண்டும் இபப அவசரமில்லை...... வேறு வேலை யைப் பாருங்கோ.''

''என்ரா தம்பி, அங்க ஏதும்......''

''இல்லை அம்மா இந்த ஊவரை நினைக்க ......''

''என் இந்த ஊர் உனக்குப் பிடிக்கேல்லையோ இது லானே நீ பிறந்து வளர்ந்தனி இப்பதான் அதை இதைக் கண்டிட்டு இபபடி சொல்லுறியே? ...''

''அதைச் சொல்லேல்லை அம்மா ஏன் இன்னும் இந்த ஊர் இப்படி இருக்கெண்டுதான்.........''

''தம்பி ஊர் கிடக்கட்டும் நீ உன்னைப் பார்த்துக் கொள்'' எதுவும் முடிவில்லாத பேச்சாகப் பட்டது அம்மாவுக்கு. அன்று அமைதி குலைந்த நிலையில் இரவிரவாக அவள் மனதை உறுத் தியது. காலையில் கடும் காய்ச்சல் மீண்டும் தலையிடியுடன்.

''அம்மா! என்ன இன்னும் எழும்பேல்லையோ?''

''எடி புள்ளை மூட்டெல்லாம் உளையுது மலேரியாக் காச்சல் போல கிடக்குது வேப்பம் படடை கொஞ்சம் அவி யன் குடிபபம் ......''

''என்ன ஜெயந்தி ...... என்ன அம்மாவுக்கு......?''

''அம்மாவுக்கு காச்சலும், நடுக்கமுமாய் இருக்கண்ணே முந்தியும் வாறதுதான். ஆனு இப்ப கொஞ்சம் கூடவாக் கிடக்கண்ணே ......''

''சரி, சரி ... ஆசுப்பத்திரிக்குப் போவம். புவனுக்காட்ட சொல்லு. கிட்டக் கார் ஏதும் பிடிக்கேலாதோ?''

''உடையார் வீட்டை தான் நிக்குது. அதுவும் இந்த செத்தவீட்டோட பழுதெண்டவயள் ......''

''அப்ப என்னத்தில போறது?''

''மாட்டு வண்டிதான் அண்ணை. சில வேளை ரைக்றர் ஏதும் வந்தா ......''

''இந்த வருத்தத்தோட எப்படி அதில போறது ... ஊர் வைத்தியரிட்ட காட்டுவம் ......''

''அவரும் இப்ப ரவுனில தான் அண்ணை ......''

அம்மாவின் முனங்கல் அவசரப்படுத்தியது.

வாசலுக்கு வந்த மூர்த்தி செல்வத்தைக் கண்டு இருவருமாக சைக்கிளில் புறப்பட்டனர் வைத்தியரை இங்கு அழைத்து வர.

ஆறு மைல் தூரம் அரை மைல் போல் சென்ற வேகத்தில் கடந்து விட்டனர். அத்தனை வேகத்திலும் அந்த வைத்தியரின் பதில் பதற்றத்தைக் கொடுத்தது.

''தம்பி இஞ்ச எத்தனைபேர் இருக்கினம். இவ்வளவு பேரையும் விட்டிட்டு நான் எப்பிடி அங்கு வர?''

''டொக்டர்! என்ன செலவென்றாலும் நான் தாறன். வாங்க டொக்டர் வாங்க ......''

''பணத்துக்காக இல்லே ...... உம்மிட ஒரு பேஷண்டுக்காக இத்தனை பேரையும் விட்டிட்டு வரமுடியாது. முடிஞ்சா அவங்களை இங்கு கூட்டி வாங்க ......''

எதுவும் கூறமுடியாது மனப்பாரத்துடன் புறப்பட்டான். கார் ஒன்றை ஒழுங்குபடுத்திக் கொண்டு வீடு சென்றவனுக்கு அழுகுரல்கள் கனத்து அவன் காதுகளையே நம்ப மறுத்தது.

அந்தக் கோர நினைவுகளை எப்படி மறப்பான்? மறக்க முடியும்? அதிலே அவன் சிந்தனை கலந்து கலந்து அதுவே அவனது வாழ்வில் ஒரு திருப்பமாக மாறிவிட்டது.

அம்மா இறப்பதற்கும், அந்த ஊர் முன்னேறுததற்கும் அரசு, சமூக நிறுவனங்கள், அதிகாரிகள் மட்டும் காரணமாய் அவனுக்குப் படவில்லை. இத்தனையும் அனுபவிக்கும் நாங்களும்தான் காரணமென்பதை உணர்ந்த அவன் செயற்பட முனைந்தான்.

அந்த அறையில் சாப்பாட்டு மேசையிலிருந்து உணவுப் பண்டங்கள், பாத்திரங்கள், விறண்டி, விஸ்கி, பியர் போத்தல்கள் மட்டும் உருண்டோடவில்லை. அதற்கு தலைவணங்குபவர்கள் போலவே நண்பர்களும் இருக்கும் இடத்தை விட்டு எங்கெங்கோ உருண்டு உளறி குடியில் புரண்டு பிதற்றுவதை கண்டவன் மனதில் தனது அறியாமைக்கும், இன்று ஒளிபட்டு உணர்வதை அவன் செயல்கள் புலப்படுத்தின.

நண்பர்களின் விருந்து உச்ச நிலையை அடைந்தது. வார்த்தைப் பரிமாற்றங்களை மயக்க நிலையில் தங்கள் உள்ளுணர்வால்

வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்கள். இந்த நிலையில் எது வும் ஏறப்போவதில்லை என உணர்ந்தவன் அவர்களையும், ஒருவாறு ஒழுங்கு படுத்தி தூங்க வைத்து படுக்கைக்குத் தயா ரானான்.

மறுநாள் அவன் நண்பர்கள் மீண்டும் சந்தித்தனர், புது மனிதர் போன்று.

''மூர்த்தி! நேற்று கொஞ்சம் ஓவருப் போச்சுடா. அது தான் மச்சான் ......''

''உன்ர நிலை உணராது உளறிற்றம். மன்னிச்சுக்கடா.''

''அதிலென்ன பரவாயில்லை. இதில நானும் முந்தி இப் பிடி எத்தனை பேரை நிலையறியாம கதைச்சிருக்கிறன் என் றதை புரிய முடிஞ்சுது.'' என்றவன் நண்பர்களின் கடிதங் களை எடுத்து வந்தான்.

''நேற்று எனக்கும் வீட்டில இருந்து கடிதம் வந்தது மச் சான். ஒரே கஸ்டமாம் தண்ணீர் கூட இல்லாம அடுத்த கிராமத்தில எடுக்கப் போறாங்களாம். நாங்கள் இஞ்ச தண் ணியில மிதக்கிறம். குடிக்க தண்ணியில்லாம சாகிறாங்க எங் கட சனம்.'' என்றான் மோகன்.

''பல நாளுக்குப் பிறகு, எனக்கு நேற்றுத்தான்ரா வந்தது கடிதம். திருமணப் பேச்சு நடக்குதாம். வந்திட்டுப் போகச் சொல்லி ......''

''அப்ப நல்ல சாப்பாடு இருக்கெண்டு சொல்லு ......''

''எப்பிடி மச்சான் போறது? போய்விட்டு இனி ஆற்ற தலையை மாத்தி வாறது? அதுதான்ரா மச்சான் யோசினை.

''கொழுத்த சீதனம் எடுப்பியே ......''

''மச்சான் மூர்த்தி, நான் வேண்டி தங்கச்சிக்கு கொடுத்து விட்டுத் திரும்ப வேண்டியதுதானே ......''

''எனக்கும் கடிதம் கிடைச்சுது பாபு ......''

''என்னவாம் மூர்த்தி வீட்டில ......?''

''வீட்டில அப்படி ஒன்றுமில்லே பெரிசா, அம்மாவின்ர திவசமாம். எங்கட ஊரில சனசமூக நிலைய ஆண்டு விழா வாம் ......''

''அப்ப காசு லிஸ்ராகத்தான் இருக்கும் போல ......'' என்றான் பாபு,

''ஓம் மச்சான் .. ... ஆனா இதுகளை அலட்சியப்படுத்தாம உருப்படியா ஏதும் செய்வம் எண்டுதான் ......''

''அதென்னடா உருப்படி? அதைச் சொல்லன்'' என்றான் மோகன்.

''ஆண்டு விழாவிற்கு பணம் அனுப்பப் போறன். ஆனா சும்மா செலவழிக்காம சனசமூக மேற்பார்வையில் அம்மா வின் நினைவாக ஒரு மருத்துவ நிலையம் கட்ட ஏற்பாடு செய்யப் போறன். அது இல்லாமல் தானே அம்மாவும் செத்திட்டா. அடுத்த ஆண்டு திவசத்துக்கிடையில கட்டி முடிக்க வேணும். உங்கட உதவியும் இருந்தா உங்கட ஊரிலேயும் ஒரு உருப்படியான வேலைகளைச் செய்யலாம் மச்சான். இதுதான் பின்னுக்கு உதவும். சும்மா ஊரைச் சொல்லிப் பழிக்காம நாங்கள் முயன்றால் சொந்த நாட்டை முன்னேற்றலாம் இதுக் காக எங்கட கிராமக் குடிகளை நினைச்சு குடியை நிறுத்தினா அந்த பிறந்த மண்ணையும் சொர்க்கமாக்கலாம் பாரு ......''

''போலி முகமூடி போட்ட உடையாரின் பணம் போல, பேருக்குச் செய்யாம ஊருக்குச் செய்வம்'' என்ற மூர்த்தியின் பேச்சுக்கள் எல்லோர் உள்ளத்தையும் தொட்டது.

''மூர்த்தி சொல்லுறதில உண்மையிருக்கு. எங்களூரில எத்தனை செய்யக் கிடக்கு. அவங்கட அழிவில்தானே எங்கட இந்த வாழ்க்கை வளருது. இதில எங்கட பங்களிப்பு சிறிதளவாவது உதவாட்டி பிறகென்ரா இந்த வாழ்க்கை?'' என மோகனும் வலியுறுத்தினான்,

''மச்சான், வாயடிக்காம செயலில இறங்குவம். இனி ஒவ்வொரு பகுதிக்கும் உருப்படியா ஏ தா வ து செய்வம்.'' என்றான் பாபு.

''இந்தத் திருப்பத்தை ஒவ்வொரு மனமும் உணர்ந்தால் நம்ம ஊரு சொர்க்க பூமிதானடா'' என்ற கூரலோடு எல்லோர் இணைப்பின் கரங்களும் நல்ல நம்பிக்கை உலகைப் படைக்க திடசங்கற்பம் பூண்டன.



“யோசப் பாலாவிடம் சில நல்ல பண்புகளும் காணப்படுகின்றன அவர் எதையும் சமூகப் பிரக்ஞையுடனேயே அணுக முயற்சிக்கிறார். சமூகத்திற் காணப்படுகின்ற ஏமாற்று, சுயநலம், போலித்தனம், கபடம், நல்லவர்கள் நலிவெய்த, கெட்டவர்கள் மேலோங்கும் நிலை என்பவற்றைக் கண்டு குமைகின்ற நெஞ்சத்தினை யோசப் பாலாவிடம் காண்கிறோம். சிறுமை கண்டு பொங்கும் இந்தச் சிந்தை உண்மைக் கலைஞரின் பெரும் சொத்து. இது பாலாவுக்கு வாய்த்திருக்கிறது.

அவரிடம் அவதானிப்புத் திறன் உள்ளதை அவரது சில கதைகள் சாடைமாடையாகக் காட்டுகின்றன. பாலாவிடம் காணப்படும் விடா முயற்சியும், அசுர எழுத்து வேகமும், தளராத உழைப்புத் திறனும் நம்மைக் கவருகின்றன...”

— கலாநிதி சி. மௌனகுரு.

(உணராத உண்மை சிறுகதைத் தொகுதி முன்னுரையிலிருந்து)

